29.09.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## காப்புக் காடாகும் மன்னார் வளைகுடா 1,500 எக்டேரில் திட்டம்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டம் மன்னார் வளைகுடாவை ஒட்டிய கடற்கரை பகுதியில் 1,500 எக்டேர் நிலம், விரைவில் காப்புக்காடாக அறிவிக்கப்பட உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 4 சதவீதம் வனப்பகுதி உள்ளது. இதில் சாயல்குடி, ராமேஸ்வரம் பகுதியில் 3,073 எக்டேர் காப்புக்காடு உள்ளது. வனத்துறை வசம் 1,790 எக்டேர் காப்பு நிலங்கள் உள்ளன. சாயல்குடி வனப்பகுதி ஒப்பிலான் வட்டாரத்தில் 337 எக்டேர், மாரியூர் வட்டாரத்தில் 1,136 எக்டேர் காப்பு நிலங்கள் உள்ளன.இப்பகுதி மன்னார் வளைகுடா ஒட்டிய கடற்கரையில் உள்ளது. இங்கு மணற்பாங்கான பகுதியில் உடை மரங்கள் உள்ளன. இவை கண்கவரும் விதமாக குடை போன்று காணப்படும். இவற்றை பாதுகாத்து வன பரப்பை அதிகரிக்கும் விதமாக, இப்பகுதியை வனமாக அறிவிக்க வலியுறுத்தி, 1978ல் வனத்துறை சார்பில் அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. தற்போது மீண்டும் இதற்கான அறிக்கையை, அரசு கேட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் பிச்சை கூறுகையில், "காப்புக்காடு குறித்து ஓரிரு மாதத்தில் அறிவிப்பு வர உள்ளது. அதன்பின் மணற்பாங்கான பகுதியில் மரங்களை வளர்க்க உள்ளோம். இதன்மூலம் மாவட்டத்தின் வனப்பகுதி அதிகரிக்கும்," என்றார்.

## மழையால் அணை நீர்மட்டம் உயர்வு

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனியில் சில நாட்களாக மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரையில் அதிகபட்சமாக இடையபட்டியில் 85 மி.மீ., மழையளவு பதிவானது.மழையளவு(மி.மீ.,): மதுரை82, இடையபட்டி 85, மேட்டுப்பட்டி48, கள்ளந்திரி 33, சிட்டம்பட்டி 77, புலிப்பட்டி 55, மேலூார் 41, தனியமங்கலம் 25, விரகனுார் 41, தேக்கடி 0.6, கூடலுார் 10, சண்முகாநதி 03, வீரபாண்டி 10, வைகை 04.02, மஞ்சளாறு 14, மருதாநதி 22, சோத்துப்பாறை 10, பேரணை 38, கொடைக்கானல் 36.08.அணை நீர் வரத்து: பெரியாறு அணைக்கு நீர் வரத்து496 கன அடி. வெளியேற்றம் 700 கன அடி. வைகை வரத்து 1,025. வெளியேற்றம் 60. சோத்துப்பாறை வரத்து 3. வெளியேற்றம் 3. மருதாநதி வரத்து 24. வெளியேற்றம் இல்லை.

## மின் உற்பத்தி நேற்றைய நிலவரம்

மின் நிலையம் திறன் உற்பத்தி

(மெகாவாட்)

நீர் -- 44 2,288 960

அனல் - 6 4,660 3,130

எரிவாயு - 4 516 200

மத்திய தொகுப்பு - 11 5,518 3,010

காற்றாலை 7,470 0

பிற வகை (எரிவாயு, சர்க்கரை ஆலை, தாவர கழிவு, நாப்தா) 5,700 3,550

மொத்தம் 26,152 10,850

* உற்பத்தி நிறுத்தம் - 0

* உற்பத்தி துவக்கம் - 0

**வேளாண் ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு நடத்த உத்தரவு**

வேளாண் மற்றும் கணினி ஆசிரியர்களுக்கு, பொது கலந்தாய்வு நடத்தி, இடமாறுதல் வழங்க, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அரசு பள்ளிகளில், வேளாண் தொழிற்கல்வி மற்றும் கணினி பயிற்றுனர் பணியிடங்களில், 2,200 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இடமாறுதல்இவர்களில், வேளாண் ஆசிரியர்கள், 14 ஆண்டுகளாகவும், கணினி ஆசிரியர்கள், எட்டு ஆண்டுகளாகவும், எந்தவித இடமாறுதலும் இல்லாமல், ஒரே இடத்திலே பணிபுரிகின்றனர். இவர்களுக்கு, விருப்ப மாறுதலும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக, பல போராட்டங்கள் நடந்தன. நமது நாளிதழிலும் செய்தி வெளியானது. இந்நிலையில், வேளாண் மற்றும் கணினி ஆசிரியர்களுக்கு, பொது கலந்தாய்வு நடத்தி, விருப்ப மாறுதல் வழங்க, தமிழக பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டு உள்ளது. நன்றிஇதுதொடர்பாக வேளாண் பட்டதாரி ஆசிரியர் சங்க தலைவர் மாதவன் விடுத்துள்ள அறிக்கையில், 'இடமாறுதல் நடத்த உத்தரவிட்ட அரசு, பள்ளிக்கல்வி துறை அதிகாரிகள் மற்றும், 'தினமலர்' நாளிதழுக்கு நன்றி' என, தெரிவித்துள்ளார்.

**அக்கறை இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம்**



உலகிலேயே இருதய நோய்களால் தான் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இருதய நோய்கள் குறித்தும், இருதயத்தை பாதுகாப்பது பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சர்வதேச இருதய கூட்டமைப்பு சார்பில் செப்., 29ல் உலக இருதய தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

'நைட் ஷிப்ட்', முறையற்ற உணவு பழக்கம், அதிக நேர பணி, இதனால் குடும்பத்தில் ஏற்படும் நிம்மதியின்மை போன்றவை இருதய நோய் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கிறது. அதே போல் உலகில் மாரடைப்பால் மரணம் அடைபவர்களில் 20 சதவீதம் பேர் புகை பிடிப்பவர்கள். மற்றவர்களை விட, புகைபிடிப்பவர்களுக்கு இருதய நோய் வரும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம். புகை பிடிப்பதால் இருதயத்துக்கு செல்லும் ஆக்சிஜன் அளவு குறைகிறது. 80 சதவீத மாரடைப்புகள், தடுக்கப்படக்கூடியவை.

புகை பிடிப்பவர்கள், வெளியிடும் புகையினால் அருகில் உள்ளவர்களும் பாதிக்கப்படுகின்றனர். உடல் பருமன், சர்க்கரை நோய் ஆகியவற்றால் இருதய நோய் ஏற்படலாம். சர்க்கரை நோயால் இருதயத்துக்கு செல்லும் ரத்தக்குழாய்கள் சேதமடைந்து மாரடைப்பு ஏற்படலாம். சர்க்கரை நோயாளிகளில் 75 சதவீதம் பேருக்கு இக்குறைபாடு இருக்கிறது.

**எப்படி தவிர்ப்பது:**

* புகை பிடிப்பதற்கு 'நோ' சொல்லுங்கள்.

*உப்பு அதிகம் பயன்படுத்துவதால் ரத்தக் கொதிப்பு அதிகரிக்கும். இதன் மூலம் இருதய நோய் வாய்ப்பு அதிகரிக்கிறது.

* ரத்தத்ததில் கொலஸ்ட்ரால், சர்க்கரை, ரத்த அழுத்தம் போன்றவற்றை சீராக வைத்திருக்க வேண்டும்.

l*யோகா மற்றும் தியானம் செய்வது நல்லது. உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும், தினமும் குறைந்தது 30 நிமிடமாவது உடற்பயிற்சி செய்வது அவசியம். முறையான உடற்பயிற்சி, சரியான உணவு பழக்கம், உரிய முறையில் மருத்துவம் எடுத்துக்கொள்வது இருதய நோயில் இருந்து பாதுகாக்கும்.
*'எஸ்கலேட்டர்', 'லிப்ட்' ஆகியவற்றை பயன்படுத்தாமல், மாடிப்படிகளை பயன்படுத்த வேண்டும். ஒரு நாளுக்கு சராசரியாக 10 ஆயிரம் அடிகள் நடக்க வேண்டும்.
*காய்கறிகள், அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டும். மதுப்பழக்கத்தை விட வேண்டும். கொழுப்பு இல்லாத இறைச்சி, மீன், பருப்பு வகைகள், ஆலிவ் எண்ணெய், மக்காச்சோளம், சூரியகாந்தி எண்ணெய் ஆகியன, ஓய்வின்றி உழைக்கும் இருதயத்துக்கு பாதுகாப்பளிக்கின்றன.
*சிரிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது, இருதய நோயில் இருந்து விடுபட சிறந்த மருந்து.

**இருதயத்தசை பலவீனத்தை தடுப்பது எப்படி:- டாக்டர் ஜி.துரைராஜ், மதுரை 98421 05000:**

இருதயம் ஒரு தானியங்கி தசையாகும். ஒருவரது மடித்த உள்ளங்கை அளவே உள்ள இருதயம் தானாக சுருங்கி விரியும் தன்மை கொண்டது. ஒவ்வொரு முறை சுருங்கி விரியும் போதும் 55 சதவீதத்திற்கு மேல் ரத்தத்தை உடல் உறுப்புக்களுக்கு அனுப்பி வைக்கும்.இருதயம் சுருங்கி விரிய தேவையான சத்து, இருதயத்திற்கு மேல் கிரீடம் சூட்டியது போல் அமைந்துள்ளது. கொரானரி தமனிகளில் வரும் ரத்தத்தின் மூலம் கிடைக்கிறது. இந்த கொரானரி தமனிகளில் அடைப்பு ஏற்பட்டு இருதயத்திற்கு தேவையான சத்து கிடைக்காத போது இருதயத் தசை பலவீனம் அடைகிறது. இதனால் இருதய வீக்கம் ஏற்பட்டு நடக்கும் போதும், படுக்கும் போதும் மூச்சிரைப்பும், பலவீனமும் ஏற்படுகிறது.

இருதயத் தசை பலவீனம் முற்றிய நிலையில் கால்களில் வீக்கம் ஏற்படும். கொரானரி தமனிகளில் ஏற்படும் அடைப்பை ஸ்டென்ட் சிகிச்சை, பைபாஸ் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்தால் இருதயத் தசை பலவீனம் அடைவதைத் தடுக்க முடியும். கொரானரி தமனிகளில் அடைப்பு இல்லாதவர்களுக்கும் ரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி, உடல் பருமன், பரம்பரை மற்றும் நுண் கிருமிகளால் இருதயத் தசை பலவீனம் அடையலாம். இந்த வியாதி பிறந்த குழந்தை முதல் வயதானவர்கள் வரை அனைவரையும் பாதிக்கும். இருதயத் தசை பலவீனம் அடைந்தவர்களில், 5 ஆண்டுகளில் 50 சதவீதம் வரை மரணம் அடைய வாய்ப்பு உண்டு.இதில் பெரும்பாலோர் திடீர் மரணம் அடைவார்கள். இருதயத் துடிப்பைச் சரி செய்யும் கருவியை மார்பில் நிரந்தரமாகப் பொருத்துவதன் மூலம் திடீர் மரணத்தைத் தடுக்கலாம். அத்துடன் மருந்துகளையும் தவறாமல் எடுக்க வேண்டும்.

**செயற்கை உணவை தவிர்ப்போம்- - டாக்டர்கள் ரமேஷ், ே◌ஹமநாத், மதுரை**

**82200 44606, 82200 44610:**

இந்தாண்டு 'ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தி இருதய நோயை தவிர்ப்போம்' என்ற தலைப்பில் உலக இருதய தினம் அனுசரிக்கப்படுகிறது. ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்போம் என உறுதி எடுப்போம். செயற்கை உணவை தவிர்த்து இயற்கையான பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகம் உண்போம். குழந்தைகளுக்கும் இதே உணவு முறைகளை ஊக்குவிப்போம். கற்பிப்போம்.புகையிலையை (பீடி, சிகரெட், குட்கா) முற்றிலும் தவிர்ப்போம். இதன் மூலம் குழந்தைகளையும் நண்பர்களையும் புகையிலை பாதிப்பில் இருந்து விடுவிப்போம். தினந்தோறும் உடற்பயிற்சி, விளையாட்டில் குறைந்தது அரைமணி நேரமாவது

செலவழிப்போம். இருதய நோய் காரணிகளான சர்க்கரைநோய், ரத்த அழுத்தம், கெட்ட கொழுப்பு, உடல் பருமன் ஆகியவற்றை கண்டறிந்து முறையாக மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெறுவோம்.

திடீர் மாரடைப்பு ஏன்

சாதாரண மாரடைப்பு என்பது இருதயத்திற்கு செல்லக்கூடிய ௩ ரத்தக் குழாய்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது மூன்றிலும் அடைப்பு ஏற்பட்டு, இருதயத்திற்கு செல்லும் ரத்தத்தில் இருக்கக்கூடிய ஆக்ஸிஜன் குறைந்து, சதைகள் கெட்டுப்போவதால் ஏற்படுகிறது. ஆனால், திடீர் மாரடைப்பு என்பது இருதயத்திற்கு செல்லக்கூடிய எலக்ட்ரிக்கல் சிஸ்டம் கெட்டுப்போவதால் மிக வேகமாக அளவிட முடியாத துடிப்பு ஏற்பட்டு, மூளைக்கு செல்லக்கூடிய ரத்த அளவு குறைந்து சுய நினைவை இழந்து மயக்கமடைதலாகும். சாதாரண மாரடைப்பை நாம் சுலபமாகக் கண்டுபிடித்து காப்பாற்றிவிடலாம். ஆனால், திடீர் மாரடைப்பை உடனடியாக கவனிக்காமல் விட்டால் உயிரிழப்பு ஏற்படும்.

**இதற்கு முக்கிய காரணங்கள்- டாக்டர். பாஸ்கரன், மதுரை:**அதிகமான கொழுப்புச் சத்து நிறைந்த உணவு உட்கொள்ளுதல், சிகரெட் மற்றும் மதுப்பழக்கம், அளவுக்கதிகமான டென்ஷன், வேலைப்பளு, சரியான நேரத்தில் உணவு உண்ணாமை, உடற்பயிற்சியின்மை, ஈரலில் அதிக கொழுப்புச்சத்து சேர்த்தல், ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி உள்ளவர்கள் எந்தவிதமான உணவு மற்றும் மருந்துக்கட்டுப்பாடு இல்லாதிருத்தல்.மேலே குறிப்பிட்ட 9 காலங்களை உணர்ந்து செயல்பட வேண்டும்.35 வயதிற்குமேல் கட்டாயமாக ஒரு முறை முழு உடல் பரிசோதனை செய்து உடலிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டால் திடீர் மாரடைப்பு ஏற்படாது தடுக்க இயலும்.

**மாரடைப்பு அறிகுறிகள்-- டாக்டர். பி.எஸ்.நாகேந்திரன், மதுரை. 97901**

**11411:** புகைப்பிடித்தல், உயர் ரத்த அழுத்தம், உடலின் எடை, உடற் பயிற்சி செய்யாமை, சர்க்கரை வியாதி போன்றவற்றால் மாரடைப்பு வரும். இது கட்டுப்படுத்த முடிந்த காரணங்கள்.வயது, பரம்பரையாக வரும் மரபணுத் தன்மை, இது தவிர ரத்தக் குழாயில் எவ்வித அடைப்பின்றியும் மாரடைப்பு வரலாம். இதற்கு காரணம் திடீரென முழுமையாக அடைபடும் அளவிற்கு இருதயத்தின் ரத்தக் குழாயில் ஏற்படும் கடுமையான இறுக்கம். இது கட்டுப்படுத்த முடியாத காரணங்களாகும். நெஞ்சுவலியுடன் மூச்சுவிடுவதில் சிரமம் மற்றும் இறுக்கம், வியர்த்தல், குமட்டல், மயக்கம் வருவது போல உணர்தல், மார்பின் முன் பகுதியிலோ அல்லது நெஞ்சுக் கூட்டின் பின்புறமாக வலி இருக்கலாம். இங்கிருந்து வலி கழுத்து அல்லது இடது கைக்கு பரவலாம். வாந்தி, இருமல், படபடப்பு மற்றும் 20 நிமிடங்களுக்கு மேல் தொடரும் வலி, தீவிர நிலையில் ரத்த அழுத்தம் குறைவதால் மாரடைப்பு ஏற்பட்டு இறப்பு ஏற்படுகிறது.மாரடைப்பு வருவதற்கான எச்சரிக்கை அறிகுறி ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு விதமாக இருக்கலாம். பொதுவாக மாரடைப்பு வரும் போது முதலில் மெதுவாக நெஞ்சுவலியுடனோ அல்லது நெஞ்சில் ஒருவித கனமான இறுக்கத்துடனோ துவங்கி, பின் அவ்வலியின் தன்மை படிப்படியாக அதிகரிக்கலாம்.

**ருமாட்டிக் இருதய நோய்கள்:- டாக்டர், கே.ஜி.புவனேஷ்பாபு,மதுரை. 94866 42430:** ருமாட்டிக் நோயினால் மைட்ரல் மற்றும் அயோட்டிக் வால்வுகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. இதில் மைட்ரல் வால்வு சுருக்கம் கரு முதல் ௩0 வயது ஆண் மற்றும் பெண்களை தாக்குகிறது. பெண்களுக்கு அவர்கள் கர்ப்ப காலத்தில் இந்த நோயினால் பிரசவத்தில் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. ருமாட்டிக் இருதய நோய் வரக்காரணமானது ருமாட்டிக் காய்ச்சல். இது 'ஜிபிஎஸ்' என்ற நுண்கிருமியினால் (பாக்டீரியா) ஏற்படுகிறது. ரு முதல் கரு வயது

குழந்தைகளை இது தாக்குகிறது. ஆரம்பத்தில் இது தொண்டை அலர்ஜி போல் காணப்படுகிறது. அதற்கான சரியான சிகிச்சை எடுக்காத பட்சத்தில் ருமாட்டிக் காய்ச்சலாக காணப்படுகிறது. இதில் குழந்தைகளுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் பெரிய முட்டிகள் ஆகியவை பாதிக்கப்பட்டு வீக்கம், வலி மற்றும் நடக்க முடியாத நிலைமைக்கு கொண்டு செல்கிறது. உ முதல் ச வாரங்களில் இந்த பிரச்னைகள் தானாக மாறி விடுகின்றன. ஆனால், ரு0 சதவீத குழந்தைகளுக்கு இருதயம் பாதிக்கப்படுகிறது.இருதய நோய் முற்றிய பிறகே ருமாட்டிக் காய்ச்சல் வந்ததாக சில சமயம் கணிக்க வேண்டியுள்ளது. இந்த காய்ச்சல் வந்த குழந்தைகளுக்கு 'எக்கோ கார்டியோ கிராம்' இருதய ஸ்கேன் எடுத்து, வால்வுகளை சரியாக இருக்கின்றனவா என அறிய வேண்டும். இருதய ஸ்கேனில் இருதய வால்வு பாதிப்பு இருந்தால் மருத்துவர் ஆலோசனை பேரில் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். பெனிசிலின், எரித்திரிரோமைசின் மாத்திரைகளை ரு0 வயது வரை தொடர்ந்து உட்கொள்ள வேண்டி வரும்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் : மேட்டூர் அணைக்கு 22,444 நீர்வரத்து கனஅடியிலிருந்து 19,195கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69.71 அடியாகவும், நீர் இருப்பு 32.45 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**செவ்வாயில் 'தண்ணீர்' 'நாசா' உறுதி**

வாஷிங்டன், :செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறது என்பதை 'நாசா' உறுதி செய்துள்ளது. இதனால், அங்கு மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன.

சிவப்பு கோளான செவ்வாய் கிரகம் குறித்த ஆராய்ச்சியில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. சில நாடுகள் செவ்வாய்க்கு விண்கலத்தை அனுப்பி உள்ளன. இந்தியா சார்பில் 'மங்கள்யான்' அனுப்பப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி அமைப்பான 'நாசா', செவ்வாய் கிரகம் குறித்து தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.கடந்த 2006ல் 'மார்ஸ் ரெகோனாய்சன்ஸ் ஆர்பிட்டர்' (எம்.ஆர்.ஓ.,) என்ற விண்கலம் ஏவப்பட்டது. இதில் பொருத்தப்பட்ட 'இமேஜிங் ஸ்பெக்டோ மீட்டர்' எடுத்த புகைப்படத்தில் நீர் ஓடுவதற்கான ஆதாரம் கிடைத்து உள்ளது. 'செவ்வாயில் நீர் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது' என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பள்ளத்தாக்குகளில் நீர் ஓடுவது போன்ற புகைப்படங்கள் கிடைத்துள்ளன. நீர் எங்கிருந்து வருகிறது என்பதை விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கமுடியவில்லை. 'நிலத்தடி நீர் அல்லது பனிக்கட்டிகள் உருகுவதால் நீர் ஓடலாம்' என தெரிவிக்கின்றனர்.

**அழிவை நோக்கிய புறநகர் நீர் நிலைகளுக்கு விடிவு வர போகுது! தமிழக முதல்வர் அறிவிப்பால் புதிய நம்பிக்கை**



சென்னை: குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரத்திற்காக, சென்னை பெருநகர பகுதிகளில் அமைந்துள்ள, 15 ஏரிகள் முன்மாதிரியாக சீரமைக்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். அதன் மூலம், அழிவை நோக்கி பயணிக்கும் புறநகர் நீர் நிலைகளுக்கு, விடிவு காலம் வரும் என்ற புதிய நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது. சென்னையில், கடந்த 12 ஆண்டுகளுக்கு பின், கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புழல், பூண்டி, செம்பரம்பாக்கம், சோழவரம் ஆகிய நான்கு பிரதான ஏரிகளை மட்டுமே நம்பி, சென்னை குடிநீர் வாரியம் உள்ளது.

**280 நீர் நிலைகள்**

ஏரிகள் கை கொடுக்காத நிலையில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாய கிணறுகளில் இருந்து நீர் எடுத்து, சென்னைக்கு குடிநீர் வினியோகம் செய்யும் நிலை, தற்போது உருவாகி உள்ளது. ஆனால், சென்னை பெருநகர பகுதிகளில், 280 சிறிய மற்றும் பெரிய நீர் நிலைகள் உள்ளன.

அவை ஒன்றோடு ஒன்று இணைந்தே இருந்துள்ளன. குடிநீர் தேவைக்கு, இந்த நீர் நிலைகள் முன்னர் பெரிதும் கைகொடுத்துள்ளன. நகர்மயமாக்கல் காரணமாக, இணைப்பு கால்வாய்கள், நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், நீர் நிலைகளில் கழிவுநீர் விடப்பட்டும், நீர் நிலைகள் தற்போது அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

எதிர்கால குடிநீர் தேவைக்கு, நீர் நிலைகளை சீரமைத்து பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. இந்த நிலையில், சென்னை பெருநகர பகுதியில் உள்ள, 15 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு முன்மாதிரி பணிகள் மேற்கொள்ளப்படும் என, முதல்வர் ஜெயலலிதா,

நேற்று சட்டசபையில் 110வது விதியின் கீழ்அறிவிப்பு வெளியிட்டார். இந்த அறிவிப்பு, புறநகர் நீர் நிலை களுக்கு விடிவு வரும் என்ற புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. முதல்வரின் அறிவிப்பில், நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், அவற்றை மாசு படுத்தும் ஆதாரங்களை கண்டறிதல், கழிவுநீர், குப்பைகள் சேகரமாவதை தடுத்தல், கரைகளை மேம்படுத்துதல், வேலி அமைத்தல, நீரூற்று, கிணறுகள் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல், மழைநீர் வடிகால்களை நீர் நிலைகளுடன் இணைத்தல் ஆகிய பணிகள், இந்த 15 முன்மாதிரி ஏரிகளில் மேற்கொள்ளப்படும் என, தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**ஒருங்கிணைப்பு இல்லை**

அதன் மூலம், நில அளவைக்கு வருவாய் துறையும், கட்டமைப்பு பணிகளுக்கு உள்ளாட்சி நிர்வாகங்களும், பொதுப்பணித்துறையும் ஒருங்கிணைத்து, ஏரிகளை மேம்படுத்த வேண்டிய சூழல் உருவாகி உள்ளது. இந்த மூன்று அரசுத் துறை நிர்வாகங்களும், இதுநாள் வரை ஒருங்கிணைப்பு இல்லாமல் செயல்பட்டதால் தான் புறநகர் நீர் நிலைகள் அழிவை நோக்கி பயணித்தன.

தற்போது 'நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்' என்ற அமைப்பு துவக்கப்படும் என்ற அறிவிப்பின் மூலம், முதல்வரின் கவனம், நீர் நிலைகள் மீது திரும்பி இருப்பதால், புறநகர் நீர் நிலைகளுக்கு நிச்சயம் விடிவு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர் நிலைகளை மேம்படுத்துவது குறித்த முதல்வரின் அறிவிப்பு, மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பல்லாவரம், கீழ்கட்டளை ஏரிகளை மேம்படுத்த, நகராட்சிக்கு நிதி ஒதுக்கி, நகராட்சி நிர்வாகத் துறை 2001ல் அரசாணை வெளியிட்டது. ஆனால், பொதுப்பணித்துறை, இதற்கு

தடையில்லா சான்று வழங்கவில்லை. இதுபோன்ற ஒருங்கிணைப்பு இல்லாத நிலை, இனி இருக்காது. ஏரிகளை சீரமைத்தால், நிச்சயம் குடிநீர் தட்டுப்பாடும், நிலத்தடி நீர் பற்றாக்குறையும் இருக்காது.
சந்தானம்

நியூ காலனி குடியிருப்போர் நலச் சங்கம், குரோம்பேட்டை. சென்னை புறநகர் பகுதிகளில், உலக வங்கி, ஜப்பான் வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன், மழைநீர் வடிகால் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த வடிகால்கள் நீர்நிலைகளுடன் இணைக்கப்படும். வடிகால் அமைக்கப்படும் அதே நேரத்தில், பாதாள சாக்கடை பணிகளும் துரிதப்படுத்தப்படும். அதன் மூலம், நீர்நிலைகள் கழிவுநீர் பிடியில் இருந்து மீட்கப்படும்.
சென்னை மாநகராட்சி அதிகாரி.

**மழையால் அணை நீர்மட்டம் உயர்வு**

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனியில் சில நாட்களாக மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரையில் அதிகபட்சமாக இடையபட்டியில் 85 மி.மீ., மழையளவு பதிவானது.மழையளவு(மி.மீ.,): மதுரை82, இடையபட்டி 85, மேட்டுப்பட்டி48, கள்ளந்திரி 33, சிட்டம்பட்டி 77, புலிப்பட்டி 55, மேலூர் 41, தனியமங்கலம் 25, விரகனூர் 41, தேக்கடி 0.6, கூடலூர் 10, சண்முகாநதி 03, வீரபாண்டி 10, வைகை 04.02, மஞ்சளாறு 14, மருதாநதி 22, சோத்துப்பாறை 10, பேரணை 38, கொடைக்கானல் 36.08.அணை நீர் வரத்து: பெரியாறு அணைக்கு நீர் வரத்து496 கன அடி. வெளியேற்றம் 700 கன அடி. வைகை வரத்து 1,025. வெளியேற்றம் 60. சோத்துப்பாறை வரத்து 3. வெளியேற்றம் 3. மருதாநதி வரத்து 24. வெளியேற்றம் இல்லை.

## சென்னையின் நீர் ஆதாரங்களை பாதுகாக்க தனி இயக்கம்

சென்னை: "சென்னையின் நீர் ஆதாரங்களை பாதுகாத்து, சீரமைக்க, நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் துவங்கப்படும்," என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டசபையில், 110வது விதியின் கீழ், நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிவிப்புகள்:

* சென்னை நகரின், நீர் ஆதாரங்களை பாதுகாத்து சீரமைக்க, 'நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்' துவங்கப்படும்

* இந்த இயக்கம் மூலம், பெரிய குடியிருப்பு வளாகங்கள், அரசு கட்டடங்கள், கல்லூரிகள், பள்ளிகளில், மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்படும். 15 பெரிய வளாகங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் மாதிரி திட்டங்கள் (பைலட் ப்ராஜக்ட்ஸ்) மேற்கொள்ளப்படும்

* மழைநீர் வடிகால்களில் பெறப்படும் நீரை, நீரூற்று கிணறுகள் மூலம் சேகரித்து, நிலத்தடி நீர் மேம்படுத்தப்படும்; இதற்காக, இரண்டு இடங்களில் மாதிரி திட்டங்கள் அமைக்கப்படும்

* சென்னை நகர பகுதியில் உள்ள, 15 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, பாதுகாப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் செய்யப்படும்

* சுத்திகரித்த கழிவுநீர், நீர்நிலைகளின் நீர் ஆதாரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படும்; இவற்றுக்கான மாதிரிப் பணிகள், ஐந்து கோடிரூபாயில் மேற்கொள்ளப்படும்

* சென்னை தெற்கில் உள்ள விரிவாக்க பகுதிகளுக்காக, சோழிங்கநல்லூரில், தினமும், ஐந்து கோடி லிட்டர் கழிவுநீரை, சுத்திகரிப்பு செய்யும் நிலையம், 65 கோடி ரூபாயில் அமைக்கப்படும்

* தண்டையார்பேட்டை மண்டலத்தில், 23 கோடி ரூபாய் செலவில்,சாலை, புதிய தெருக்களில் பெயர் பலகை, பூங்கா சீரமைப்பு,

பள்ளி கட்டடங்கள் அபிவிருத்தி, பொதுக் கழிப்பறை, உடற்பயிற்சிக் கூடங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட, பணிகள் மேற்கொள்ளப்படும் I மொத்தம், 510 பேருந்து பயணிகள் நிழற்குடைகள், 51 கோடி ரூபாயில் நவீனப்படுத்தப்படும். இவ்வாறு அவர் அறிவித்தார். தேனியில் குடிநீர் திட்டம் தேனி மாவட்டத்தில், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை மற்றும் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த, 16 கிராம குடியிருப்புகளுக்கு, ஐந்து கோடி ரூபாய் செலவில், கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**பசுமை புரட்சி!கிராம விவசாயத்தில் சோலார் பயன்பாடு; மின்தேவையை பூர்த்தி செய்யும் சூரிய ஒளி**

காரைக்குடி : கிராம விவசாயத்தில் சோலாரின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், கண்ணுக்கு தெரியாத ஒரு பசுமை புரட்சி காலூன்றி வருகிறது.

கண் எட்டும் துாரம் விவசாயம் மேற்கொண்டவர்கள், விண் எட்டும் மழை இல்லாததால் மண் வெட்டி போடும் தொழிலையே மறந்தனர். அறுவடை திருநாளை கொண்டாடுவதற்காக தை பொங்கல் வழி பிறந்தது. இன்றோ அது வெறும் விழாவாக அனைவராலும் கொண்டாடப்படுகிறது. விவசாயி வீட்டிலோ வெறும் கஞ்சியும், வெங்காயமும் என்ற நிலை. விண்மழை பொய்த்தாலும் மண் மழையான நிலத்தடி நீர் விவசாயம் ஒரு சில பகுதிகளில் இன்னும் உயிரோட்டமுடன் தான் உள்ளது. ஆழ்துளை கிணறு தோண்டி, அளவுக்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சி நிலத்தடியில் வீணாக்கியதை குறைத்து சொட்டு நீர் பாசனம் மூலம் சொற்ப தண்ணீரே செலவாகிறது. எலும்பு மூலம் எப்படி நம் உடல் நேராக நிற்கிறதோ, அதே போன்று விவசாயம் மூலம்தான் நம் நாடும் உயர்ந்து நிற்கிறது. இந்த வாரம் ஆறு மணி கரன்ட், 2 மணி கரன்ட், 10 மணி கரன்ட் என விவசாயத்துக்கு குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது. தற்போது எந்நேரமும் வழங்க வழிவகை இருந்தாலும்

பற்றாக்குறையால் தண்ணீர் பாய்க்க வழியில்லை. இருக்கின்ற இயற்கை வளங்களில் நாம் இன்னமும் முழுமையாக பயன்படுத்தாமல் இருப்பது கடல்நீரும், சூரிய ஒளியும் தான். கடல் நீர் எல்லாருக்கும் சாத்தியமில்லை. சூரிய ஒளி சாத்தியமே. சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் மின் ஆற்றல் தற்போது மெல்ல மெல்ல மின்தேவையை பூர்த்தி செய்து வருகிறது. கிராம அளவில் விவசாயம் மேற்கொள்பவர்கள் இது குறித்து விழிப்புணர்வு பெற்று, தற்போது சோலார் பேனல்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். நாள் முழுவதும் கிடைக்கும் இந்த ஆற்றல் மூலம் தேவைக்கு ஏற்ப தண்ணீர் கிடைக்கிறது. விவசாயமும் செழிக்கிறது என்கின்றனர்.

காரைக்குடி அருகே நங்கம்பட்டி ராஜ்பரத் கூறும்போது: பி.இ., முடித்துள்ளேன். ஆரம்பத்திலிருந்தே விவசாயத்தில் ஆர்வம் உள்ளது. 45 ஏக்கர் இடம் உள்ளது. இதில் 14 ஏக்கரில் கரும்பு, 4 ஏக்கரில் தென்னை ஒரு ஏக்கரில் கடலை பயிரிட்டுள்ளோம். ஆழ்துளை கிணறு மூலமே விவசாயம் மேற்கொண்டு வருகிறோம். 7 எச்.பி., திறனுள்ள மின் இணைப்பு மோட்டார் உள்ளது. அதன் மூலம் அனைத்து இடங்களுக்கும் தண்ணீர் பாய்ச்ச இயலாது என்பதால், அடுத்த இணைப்புக்கு விண்ணப்பித்துள்ளோம். ஆனால், இன்னும் கிடைக்கவில்லை. இதனால் 5 எச்.பி., திறன் சோலார் பேனல் அமைத்துள்ளோம். காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சோலார் மின் ஆற்றல் மூலம் மோட்டார் ஓடுகிறது. ஏழு ஏக்கர் கரும்புக்கு பாய்ந்தது போக தென்னைக்கும் பாய்கிறது. சோலார் அமைப்பதற்கு முன்பு இரண்டு மாதத்துக்கு ஒரு முறை ரூ.18 ஆயிரம் மின் கட்டணம் செலுத்தினோம். தற்போது, நான்காயிரமாக குறைந்துள்ளது. இன்னொரு சோலார் பேனல் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம், என்றார்.

சோலார் பேனல் அமைத்து தரும் நிறுவன விற்பனையாளர் சலீம்: மத்திய அரசு நபார்டு வங்கி மூலம் விவசாய நீர் பாசன தேவைக்காக 30 ஆயிரம் சோலார் பம்பு நிறுவ திட்டம் தீட்டியுள்ளது. அத்திட்டத்தின் மூலம் சோலார் பம்பு செட்டு மானியத்தை வங்கி மூலம் பெற்று பயனாளிக்கு அளிக்கிறோம். 3 எச்.பி., பேனல் அமைக்க ரூ.3 லட்சத்து 47 ஆயிரம் செலவாகும். இதில் அரசு மானியமாக ரூ.ஒரு லட்சத்து 29 ஆயிரத்து 600 வழங்கப்படுகிறது. 5 எச்.பி.,க்கு ரூ.4 லட்சத்து 49 ஆயிரத்து 900-ல் 2 லட்சத்து 16 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. நாங்கள் வழங்கும் சூரிய ஒளி தகடுக்கு 25 ஆண்டும், பம்பு கட்டுப்பாட்டு கருவிக்கு 5 ஆண்டும் உத்தரவாதம் வழங்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில் ஒரு சில மாதங்களிலேயே 10 இடங்களில் அமைத்துள்ளோம். விவசாயிகள் சோலார் பேனல் அமைக்க ஆர்வமாக உள்ளனர், என்றார்.

தொடர்புக்கு: 77087 99191.

**பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் கவலை! வறட்சியால் கருகும் மானாவாரி பயிர்கள்**

தியாகதுருகம் : தென்மேற்கு பருவமழை குறைந்து பகலில் கோடை காலத்தை போல் வெயில் சுட்டெரிப்பதால் தியாகதுருகம் பகுதியில் மானாவாரி பயிர்கள் கருகி வருகின்றன.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் போக்கு காட்டி வருகிறது. இதனால் நீர்வளம் குறைந்து விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள மணிமுக்தா, வீடூர் அணைகள் கடந்த 2 ஆண்டுகளாக நிரம்பாமல் ஆயக்கட்டு பகுதியில் பயிர் சாகுபடி கேள்விக் குறியாகிவிட்டது. குறிப்பாக நன்செய் பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைப்பது தட்டுப்பாடு ஏற்பட்டதால், நெல் சாகுபடி பரப்பு வேகமாக குறைந்து

வருகிறது. ஆண்டுதோறும் மழையளவு குறைந்து வருவதால் மானாவாரியில் பயிரிடுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தியாகதுருகம் பகுதியில் கம்பு, உளுந்து, பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் மானாவாரியில் சாகுபடி செய்துள்ளனர். இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை தாமதமாகவே துவங்கிய போதிலும், எதிர்பார்த்தபடி மழை பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றியது. இதன் காரணமாக மானாவாரி பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் காய தொடங்கியது.கடந்த சில நாட்களாக பகலில் கோடை காலத்தை போல் கடும் வெயில் நிலவுகிறது. இதனால் விளைநிலங்களில் வறட்சி அதிகரித்துள்ளது.

தண்ணீர் இன்றி வாடிய நிலையில் இருந்த பயிர்கள் வேகமாக கருகி வருகிறது. இப்பகுதியில் பயிரிட்டுள்ள 7 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான மானாவரி பருத்தி செடிகள் வாடிய நிலையில் பரிதாபமாக காட்சியளிக்கிறது.அதேபோல் மக்காச்சோள பயிர்களும் நீர் இன்றி மண்ணில் மடிந்து கிடக்கிறது. நீர்நிலைகள் வறண்டு கிடப்பதாலும், எதிர்பார்த்த அளவு மழை பெய்யாமல் போனதாலும் நன்செய் மற்றும் புன்செய் பயிர்கள் இவ்வாண்டு விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தையே கொடுத்துள்ளதால் கவலையடைந்துள்ளனர்.

**உழவர்கரை நகராட்சி பகுதியில் தெருக்கள் பளீச்! 'ஹைடெக்' முறையால் மக்களிடம் வரவேற்பு**

உழவர்கரை நகராட்சியில் 'ஹைடெக்' முறையில் குப்பை அகற்றுவதால், வீதிகள் பளீச்சென காட்சியளிக்கின்றன. இது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

புதுச்சேரியில், நகராட்சி ஊழியர்கள் மற்றும் தனியார் மூலம் குப்பைகள் அகற்றும் பணி நடந்தது. 400 டிராக்டர்கள், நகரில் குப்பைகளை சேகரித்து, சாலையில் சிந்தியபடி, தாறுமாறாக சென்றதால்,

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு அதிக விபத்துகள் நடந்தன.

**ஹைடெக்**

டிராக்டரில் குப்பை அள்ளுவதற்கு பதில், மும்பை போன்ற பெரு நகரங்களில் செயல்படுத்துவது போல், 'ஹைடெக்' முறையில் குப்பைகளை அகற்ற, அரசு முடிவு செய்தது. அதன்படி, பெங்களூருவை சேர்ந்த 'ஸ்வச்தா கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்திடம், 10 ஆண்டுகளுக்கு, குப்பை அள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிகள், வில்லியனூார், அரியாங் குப்பம் உட்பட அனைத்து கொம் யூன் பஞ்சாயத்துகளில் இந்நிறுவனம் குப்பை அகற்றும் பணிக்கு நடவடிக்கை எடுத்துள்ளது. முதற்கட்டமாக, அரியாங்குப்பம கொம்யூன் பஞ்சாயத்தில் கடந்த 17ம் தேதியும், 23ம் தேதி முதல் உழவர்கரை நகராட்சி மற்றும் வில்லியனுாரிலும் இத்திட்டம் துவக்கி, குப்பைகள் அகற்றப்படுகிறது. உழவர்கரை நகராட்சி பகுதியில், ஸ்வச்தா கார்ப்பரேஷன் ஊழியர்கள், வீடுகளுக்கு சென்று குப்பைகளை சேகரித்து வருகின்றனர்.

இத்திட்டத்தில், பிளாஸ்டிக் கூடைகளில் சேகரித்த குப்பை கள், டிரை சைக்கிள் மற்றும் சிறிய டாடா ஷிப் வாகனங்கள், இழுத்து செல்லும் வகையில் நவீன குப்பை தொட்டிகள் மூலம், வீதிகளில் சிந்தாமல் எடுத்துச் செல்லப்படுகிறது.
வீதிகளில் முக்கிய இடங்க ளில் இரும்பு குப்பை தொட்டி கள் வைத்தும், சேகரிக்கப்பட் டுள்ளது. சேகரிக்கும் குப்பைகள், ஹைட்ராலிக் வசதியுடன் கூடிய காம்பாக்டர் வாகனம் மூலம் மொத்தமாக, குருமாம்பேட் குப்பை கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஏற்கனவே 200 டிராக்டர்கள், நகர வீதிகளில் தினசரி இருமுறை இயக்கிய நிலையில், தற்போது, 12

டன் எடையுள்ள குப்பைகளை ஒரே நேரத்தில் காம்பாக்டர் வாகனத்தில் ஏற்றிச் செல்வதால், வெறும் 15 காம்பாக்டர் வாகனம் மட்டுமே இயக்கப்படுகிறது.

**மக்கள் நிம்மதி**

நகர வீதிகளில் தாறுமாறாக குப்பைகளை எடுத்துச் செல்லும் டிராக்டரை பார்த்து மக்கள் அலறிய நிலையில், யாருக்கும் தொந்தரவின்றி, குறைந்த வாகனங்களே குப்பைகளை ஏற்றிச் செல்வதால் மக்கள் நிம்மதியடைந்துள்ளனர். உழவர்கரை நகராட்சியில் துப்புரவு பணி துவக்கப்பட்டுள்ள நிலையில் ஒயிட் டவுன் பகுதிகளை உள்ளடக்கிய புதுச்சேரி நகராட்சியில் ஹைடெக் குப்பை அள்ளும் திட்டம், அக்டோபர் முதல் வாரம் துவங்கப்படுகிறது.இத்திட்டம் துவக்க நிலையில் இருப்பதால் சில நடைமுறை சிக்கல்கள் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, அடுத்த மாதம் முதல் இத்திட்டம் முழுமையான செயல்பாட்டிற்கு வரும் என டெண்டர் எடுத்துள்ள தனியார் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

**ஒத்துழைப்பு தேவை**

உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் கூறுகையில், குப்பைகளை அவரவர் வீட்டில் பைகளிலோ, கூடையிலோ சேகரித்து வைத்தால், துப்புரவு ஊழியர்கள் நேரடியாக வந்து பெற்றுக் கொள்வர். குப்பைகளை வீதியிலோ அல்லது வாய்க்கால்களிலோ கொட்ட வேண்டாம். பொது மக்கள் முழு ஒத்துழைப்பு இருந்தால் இத்திட்டம் முழுமையாக பயன் கொடுக்கும்' என்றார்

**காய்கறி உற்பத்தி செய்த 160 பேருக்கு மானியம்**

வேலூர்: பந்தல் சாகுபடி மூலம், காய்கறி உற்பத்தி செய்த, 160 பேருக்கு, ரூ. 145 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளதாக, கலெக்டர் நந்தகோபால் கூறினார்.

வேலூர் மாவட்டம், சிறு கறும்பூரில், பந்தல் சாகுபடி மூலம் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுவதை கலெக்டர் நந்தகோபால் பார்வையிட்டார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது: வேலூர் மாவட்டத்தில், 31 ஆயிரத்து 700 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆற்காடு, வாலாஜா பேட்டை, சோளிங்கர், திமிரி, காவேரிப்பாக்கம், நெமிலி, அரக்கோணம் பகுதியில், இயந்திர நடவு நெற் பயிர் சாகுபடி செய்ய, ஒரு ஹெக்டேருக்கு, 3,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. காய்கறி, மலர் சாகுபடி செய்ய, நிழல் வலைக்குடில் அமைக்க, 15 விவசாயிகளுக்கு ரூ 40.10 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 15 ஆயிரம் ச.மீட்டர் பரப்பில் நிழல் வலைக்குடில்கள் அமைக்கப்பட்டுள்ளது. பந்தல் சாகுபடி மூலம் காய்கறிகள் உற்பத்தி செய்பவர்களுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 50 சதவீதம் என, ரூ 2 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 76.50 ஹெக்டேர் பரப்பில், பந்தல் சாகுபடி மூலம் காய்கறி உற்பத்தி செய்ய, ரூ.145.20 லட்சம், 160 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### விடிய,விடிய கன மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு

சங்கராபுரம் : சங்கராபுரம் பகுதியில் விடிய,விடிய பெய்த கன மழை பெய்ததால், ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது.சங்கராபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய கன மழை பெய்தது. இரவு 11:00 மணிக்கு துவங்கிய மழை அதிகாலை 4:00 மணி வரை நீடித்தது. சங்கராபுரம் வட்டம் கல்வராயன் மலையில் பெய்த மழை காரணமாக மணி நதியில் நேற்று காலை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.நீண்ட நாட்களுக்கு பின் ஆற்றில் வெள்ளம் வந்ததை சங்கராபுரம் நகர பொது மக்கள் ஆவலுடன் சென்று பார்த்தனர்.

## காடு வளர்ப்பு திட்டம்: மரக்கன்று நடும் பணி நிறைவு

ஈரோடு: தனியார் காடு வளர்ப்பு திட்டத்தில் அந்தியூர் வட்டாரத்தில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி நிறைவடைந்து இருப்பதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அந்தியூர் வனச்சரகர் ராஜமாணிக்கம் கூறியதாவது: ஈரோடு,அந்தியூர் வனப்பகுதியில் தனியார் காடுவளர்ப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்க நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது. தமிழ்நாடு பல்லுயிர் பரவலாக்கம் மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் மரக்கன்று உற்பத்தி செய்யும் பணி துவங்கியது. வேம்பு, தேக்கு மரங்கள் ஒரு மீட்டர் உயரம் வரை வளர்க்கபட்டது. இவை கெட்டிசமுத்திரம், மாத்தூர், பிரம்மதேசம், நகலூர், மைக்கேல்பாளையத்துக்கு தலா 10 ஆயிரம் வீதம் மொத்தம், 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி கடந்த இரு மாதங்களாக நடந்தது. பணிகள் நிறைவு அடைந்துள்ளது. மேலும் மாபெரும் மரம் நடும் திட்டம் நடக்கிறது. பணி விரைவில் நிறைவு பெற உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## மெஷின் நெல் நடவு பணி: வேளாண் அதிகாரி ஆய்வு

கோபி: நம்பியூர் வட்டாரத்தில், கீழ்பவானி பாசன பகுதிகளில், மெஷின் மூலம் நெல் நடவு பணிகளை வேளாண் துணை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பின், உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது: நம்பியூர் வட்டாரத்தில், கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில் இயந்திர நெல் நடவுக்கு விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது குருமந்தூர், நடுப்பாளையம், ஊஞ்சப்பாளையம், கரட்டுப்பாளையம், மோடூர்பாளையம், எலத்தூர், கூடக்கரை உள்ளிட்ட கிராமங்களில், பிளாஸ்டிக் தட்டுகளில் நாற்றாங்கால் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடக்கிறது. ஏ.டி.டி., 38, கோ.ஆர்., 50 ஆகிய வேளாண்மைத்துறை

பரிந்துரை செய்யும் ரகங்களுடன், புதிய ரகங்களான என்.பி., 3114, காவேரி சுப்ரீம் சோனா ஆகிய ரகங்களை பரிசார்த்த முறையில் நாற்று விட்டுள்ளனர், என்றார். சுண்டக்காம்பாளையம் முன்னோடி விவசாயி நஞ்சப்ப கவுண்டர் கூறுகையில், "நான் பல ஆண்டுகளாக திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் ஒற்றை நெல் நாற்று நடவு செய்து வருகிறேன். இளம் வயது நாற்றுகளை மெஷின் மூலம் நடுவதால், அதிக தூர்கள் பிடித்து, பதர்கள் இல்லாத அதிக எடையுடன் நெல் மணிகள் உருவாகிறது," என்றார்.

## அரச்சலூரில் 26 மி.மீ., மழை பதிவு

ஈரோடு: மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக லேசான மழை ஆங்காங்கே பெய்ய துவங்கி உள்ளது. பெரும்பாலான இடங்களில் நேற்று முன் தினம் மழை பெய்தது. அரச்சலூரில் அதிகபட்ச மழையளவு பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம் (மி.மீ): அரச்சலூர், 26, மொடக்குறிச்சி, 15, சென்னிமலை, 22, சிவகிரி, 19, முத்தூர், 14, மங்களப்பட்டி, 10, வெள்ளகோவில், 10.4, காங்கேயம், 10, ஒரத்துப்பாளையம், 9, பவானி சாகர், 11.2, சத்தியமங்கலம், 7.2, கொடிவேரி 8, கோபி, 6.3, எலந்தகுட்டை மேடு, 6, கவுந்தப்பாடி, 9.2, பெருந்துறை, 8, பவானி, 9.6, புங்கம்பாடி, 6.2, ஈரோடு, 9. மழையால் நேற்று இதமான சூழல் காணப்பட்டது.

## பரவலான மழை எதிரொலி: தப்பியது கடலை செடி

புன்செய் புளியம்பட்டி: புன்செய் புளியம்பட்டியில் உள்ள மானாவாரி நிலங்களில் விதைத்துள்ள நிலக்கடலை, தற்போது பெய்த மழையால் செழிப்படைந்துள்ளது.

புன்செய் புளியம்பட்டி சுற்றுப்பகுதியில் உள்ள நல்லூர், விண்ணப்பள்ளி, மாதம்பாளையம், பனையம்பள்ளி, சொலவனூர் பகுதிகளில்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் மானாவாரி நிலங்கள் உள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த பருவமழையால் விவசாயிகள் மானாவாரியில் நிலக்கடலை விதைத்தனர். நிலக்கடலை செடி ஆரோக்கியமாக முளைத்தது. பின் போதிய மழை பெய்யாததால் நிலக்கடலை செடி வயலோடு வறண்டு போகும் அபாய நிலை ஏற்பட்டது. விவசாயிகள் உரம் போட்ட செலவுகூட கிடைக்காமல் நஷ்டம் ஏற்படும் என்று கவலையடைந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக புன்செய் புளியம்பட்டி சுற்றுப்பகுதியில் அவ்வப்போது பருவமழை பரவலாக பெய்து வருகிறது. வாடிகிடந்த நிலக்கடலை செடி, தற்போது பசுமையாக செழிப்பாக காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் சற்றே நிம்மதி அடைந்துள்ளனர்.

## நீலகிரியில் ரேபீஸ் நோய் இல்லை கால்நடை சேவை மையம் தகவல்

குன்னூார்: குன்னூார் அருவங்காடு சர்வதேச கால்நடை சேவை பயிற்சி மையம் சார்பில், உலக ரேபீஸ் தினவிழா நடந்தது. விழாவுக்கு, தலைமை வகித்த நிறுவன மருத்துவ இயக்குனர் இலானா ஓட்டர் பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில், 1997ம் ஆண்டு முதல், 30 ஆயிரம் நாய்களுக்கு, எங்கள் மையம் சார்பில், ரேபீஸ் தடுப்பூசி போடப்பட்டது. ஐந்து ஆண்டுகளில், 28 ஆயிரம் நாய்களுக்கு இலவசமாக கருத்தடை ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளது. நீலகிரியில் இதுவரை ரேபீஸ் நோய் இல்லை. நாயின் உமிழ்நீர் மூலம் மட்டுமே ரேபீஸ் நோய் பரவும். வளர்ப்பு நாய் வைத்துள்ளவர்கள், ஆண்டுக்கு ஒரு முறை கட்டாயம் நாய்களுக்கு தடுப்பூசி போட வேண்டும். எங்கள் திட்டத்தின் கீழ், மசினகுடி மாவனல்லா இருளர் இன ஆதிவாசி மக்களுக்கு, மிருகங்களை கையாளுதல் பயிற்சி அளிக்கப்பட்டு, 30 பேர் பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு, இலானா ஓட்டர் பேசினார். தொடர்ந்து, சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## நொய்யல் ஆற்றில் மழைநீருடன் சாயக்கழிவு: காவிரியில் கலப்பதால் விவசாயம் பாதிப்பு

வேலாயுதம்பாளையம்: நொய்யல் ஆற்று நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கடந்த சில நாட்களாக பெய்த மழை நீருடன், ஒரத்துப்பாளையம் சாயக்கழிவு நீரும், காவிரி ஆற்றில் கலப்பதால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காவிரியும், நொய்யல் ஆறும் சங்கமிக்கும் இடத்தில் இருந்து, காவிரி ஆற்றில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில், சிறு விவசாயிகளின் நதி நீரேற்று பாசன நீர் உந்தும் மையம், வேட்டமங்கலம், புங்கோடை, காளிபாளையம் பகுதியில் உள்ள, 200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலம் பாசன வசதி பெறும் வகையில் அமைந்துள்ளது. நொய்யல் ஆற்றில், மழைநீர் கலந்த சாயக்கழிவு நீர் செல்வதையடுத்து, அப்பகுதியில் தண்ணீர் பாசனத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து, நொய்யல் பாசன விவசாயிகள் நலசங்க தலைவர் ராமசாமி கூறியதாவது: நொய்யல் ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையினால், தற்போது நொய்யல் ஆற்றில் தொடர்ந்து மழைநீருடன் சாயக்கழிவுநீர் வருகின்றது. மழைநீரினால் எவ்வித பயனும் இல்லை. மழைநீருடன் கலந்துள்ள சாயக்கழிவு நீர் நச்சு தன்மை கொண்டதாகவே இருப்பதால் விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## உழவர் உற்பத்தியாளர் நிறுவன கருத்தரங்கம்

தஞ்சாவூர்: தஞ்சாவூரில், நபார்டு சார்பில் நடந்த, மண்டல அளவிலான உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தினருக்கான கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்கில், கலெக்டர் சுப்பையன் பேசியதாவது: உழவர்கள், ஆயிரம் பேர் இணைந்து நிறுவனத்தை தொடங்கும்போது அவர்களே சந்தையாளர்களாகவும் செயல்பட வேண்டும். விளைபொருள்களை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு இடுபொருள்கள் தேவைப்படும். எனவே, அவர்களுக்குள்ளாகவே பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். இதன் மூலம், உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டுமின்றி, விற்பனையாளர்களாகவும், நுகர்வோர்களாகவும் செயல்பட முடியும். மாவட்டத்தில், 120 மாணவர் விடுதி, 2,000க்கும் அதிகமான சத்துணவு, ஊட்டச்சத்து மையங்கள் உள்ளன. இவற்றுக்கு தினமும் காய்கறிகள், பருப்பு வகைகள், கீரைகள் தேவைப்படுகின்றன. இந்த தேவைகளை உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் நிறைவு செய்யலாம். இதுபோன்ற நடவடிக்கை மூலம், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தை வலுப்படுத்தலாம். இவ்வாறு, அவர் பேசினார். வேளாண் துறை இணை இயக்குநர் ஞானஒளி, நபார்டு மாவட்ட மேம்பாட்டு மேலாளர்கள் சுப்பிரமணியன் (தஞ்சாவூர்), ரவிசங்கர் (திருவாரூர்), கணேஷ் (நாகை) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இயற்கை வளம், வைகை ஆற்றை பாதுகாக்க வேண்டும்: சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தல்**

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியத்தில் இயற்கை வளங்கள் மற்றும் வைகை ஆற்றை பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மலைப்பகுதிகளான கடமலை-மயிலை ஒன்றியம் கண்டமனூர், வருஷநாடு, மேகமலை ஆகிய 3 வனச்சரகங்களாக பிரிக்கப்பட்டு வனத்துறை மூலம் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த வனக்காடுகளில் யானை, கடாமான், சிறுத்தை புலி,

புள்ளிமான்,கேளையாடு, காட்டுமாடு, சம்பல் நிற அணில்கள் உட்பட பல்வேறு அரிய வன உயிரினங்கள் வசிக்கின்றன. இங்குள்ள மலைகளில் பல்வேறு இடங்களில் நீருற்றுக்கள் தோன்றி, வைகை ஆற்றில் கலக்கின்றன. வன வளத்தை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் இப்பகுதியை மேகமலை வன உயிரினச் சரணலாயமாக அறிவித்துள்ளன. ஆனால், இதற்கு போதிய நிதி ஒதுக்காததால் வனக்காடுகளில் வன உயிரினங்களின் குடிநீருக்காக புதிய தடுப்பணைகள் கட்டுதல்,வேட்டை தடுப்பு முகாம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நடக்கவில்லை. மேலும், சமூக விரோதிகளால் இயற்கை வளங்கள் அழிந்து வருகிறது. இதனால் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இதனால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கடமலை-மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களையும், மலைகளில் இருந்து உருவாகும் நீரூற்றுகளை பாதுகாத்தால் மட்டுமே வறட்சியில் இருந்து இப்பகுதி மக்கள் மீள முடியும். வன வளத்தை பெருக்கவும், வைகை ஆற்றை தூய்மை படுத்தவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குணசேகரன் சமூக ஆர்வலர் வருஷநாடு கூறுகையில்,"" கடந்த சில ஆண்டுகளாக வைகை ஆற்றில் குப்பை தேங்கி கிடக்கிறது. இந்த தண்ணீரை குடிக்கும் மக்களுக்கு தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள் ளது.வைகை ஆற்றையும், மலைப்பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களையும் பாதுக்காக்க மாவட்ட நிர்வாகம் ஒரு தனிக்குழு அமைத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

வனத்துறையினர் கூறுகையில்,""வருஷநாடு,மேகமலை மலைப்பகுதிகளில் தற்போது இயற்கை வளங்கள் முழு மையாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. வைகை ஆற்றை பாதுகாக்க பொதுமக்களும் முழு ஒத்துழைக்க வேண்டும்," என்றார்.

## விவசாயிகளுக்கு காய்கறி நாற்றுகள் வினியோகம்

சிவகங்கை : குன்றக்குடி அருகே நேமம் தோட்டக்கலை பண்ணையில் காய்கறி நாற்றுகளை விவசாயிகளுக்கு கலெக்டர் எஸ்.மலர்விழி வழங்கினார். தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் நேமம், தேவகோட்டை தோட்டக்கலை பண்ணையில் 47.4 லட்சம் காய்கறி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மாவட்ட அளவில் 200 எக்டேரில் வீரிய ஒட்டு காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுகள் குழிதட்டுகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்படுகிறது. இதை கலெக்டர் துவக்கி வைத்தார். தோட்டக்கலை துணை இயக்குனர் கல்யாணசுந்தரம், உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரன், அழகுமலை, மேலாளர் நிர்மலா ஆகியோர் பங்கேற்றனர்.

## 50 சத மானியத்தில் விதைக்கும் கருவி

சிவகங்கை : "" மாவட்ட விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் நேரடி விதை விதைக்கும் கருவி வழங்கப்படும்," என வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் யுவராஜ் தெரிவித்தார். அவர் கூறியதாவது: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நெல் மற்றும் சிறுதானியம் விதைக்கும் பணியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் நேரடி விதை விதைக்கும் கருவிகளை அரசு வழங்கியுள்ளது. சிவகங்கைக்கு 30 இயந்திரங்கள் வந்துள்ளன. இந்த இயந்திரம் பெற விரும்பும் விவசாயிகள் சிவகங்கை, காரைக்குடியில் உள்ள வேளாண்மை பொறியியல் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஆதி திராவிட, சிறுகுறு மற்றும் மகளிர் குழு விவசாயிகளுக்கு இயந்திரம் வாங்க 50 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்படும். டிராக்டர் வைத்துள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பை

பயன்படுத்தி,நேரடி விதை விதைக்கும் கருவிகளை பெறலாம். மேலும் விபரத்திற்கு 04575 - 240 213ல் தொடர்பு கொள்ளலாம், என்றார். உதவி பொறியாளர் செல்வம் உடனிருந்தார்.

### மரக்கன்று நடும் விழா

தேவகோட்டை : தேவகோட்டை என்.எஸ்.எம். வி.பி.எஸ். மேல்நிலைப்பள்ளியில் தேசிய மாணவர் படை சார்பாக பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா தலைமையாசிரியர் வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. காரைக்குடி என்.சி.சி. சார்பாக சுபைதார் சந்திரபால், ஹவில்தார் தர்மராஜ் பங்கேற்றனர்.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 22,500 கன அடியாகக் குறைந்தது

காவிரியின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 22,500 கன அடியாக குறைந்தது.கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து நொடிக்கு 12 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில் திறக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை இரவு காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை சற்றுக் குறைந்ததால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு திங்கள்கிழமை காலை நொடிக்கு 22,444 கன அடியாகக் குறைந்தது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 12,000 கன அடி வீதம் திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு திங்கள்கிழமை நொடிக்கு 13 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**காஞ்சிபுரத்தில் பலத்த மழை**



காஞ்சிபுரத்தில் திங்கள்கிழமை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

காஞ்சிபுரத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்து வந்தது. இதனால் பொதுமக்கள் சிரமப்பட்டு வந்தனர். கடும் வெயிலால் காஞ்சிபுரத்தில் நிலத்தடி நீர் மட்டமும் அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டதால், குடிநீர் பஞ்சமும் அதிகரித்தது.

இந்த நிலையில் காஞ்சிபுரத்தில் திங்கள்கிழமை பிற்பகல் பலத்த மழை பெய்யத் தொடங்கியது.

சுமார் முக்கால் மணி நேரம் பெய்த பலத்த மழையால், காஞ்சிபுரம் பேருந்து நிலையம், ராஜ வீதி, காமராஜர் சாலை, காந்திசாலை, வள்ளல் பச்சையப்பன் சாலை உள்ளிட்ட பிரதான சாலைகள், தெருக்களில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

இதற்கிடையே காஞ்சிபுரம் உலகளந்தார் மாடவீதியில் புதை வடிகால் நிரம்பி சாலையில் நீரூற்று போல ஓடத் தொடங்கியது. இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் நகராட்சிக்கு புகார் அளித்தனர்.

## இயற்கை உணவு கருத்தரங்கம்

காஞ்சிபுரம் அகத்தியா கிருபா அறக்கட்டளை சார்பில், இயற்கை உணவின் மகத்துவதை விளக்கும் வகையிலான கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் இயற்கை உணவு வல்லுநர் எம்.ஆனையப்பன் கலந்து கொண்டு, இன்றைய உணவு பழக்க வழக்கம் குறித்தும், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் உள்ளிட்ட உணவு பொருள்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார். அறக்கட்டளை நிறுவனர் அன்புச் செழியன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## இயற்கை உணவு கருத்தரங்கம்

காஞ்சிபுரம் அகத்தியா கிருபா அறக்கட்டளை சார்பில், இயற்கை உணவின் மகத்துவதை விளக்கும் வகையிலான கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் இயற்கை உணவு வல்லுநர் எம்.ஆனையப்பன் கலந்து கொண்டு, இன்றைய உணவு பழக்க வழக்கம் குறித்தும், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் உள்ளிட்ட உணவு பொருள்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார். அறக்கட்டளை நிறுவனர் அன்புச் செழியன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## இயற்கை உரங்களின் பயன்பாடு: விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

இயற்கை உரங்களின் பயன்பாடுகள், நன்மைகள் குறித்த குறுந்தகடு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராவக ராவ் தலைமையில்

அண்மையில் நடைபெற்றது. இதில், இயற்கை உரங்களின் பயன்பாடுகள், அதனால் ஏற்படும் நன்மைகள், மண்வளம் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்த குறுந்தகடு திரையிடப்பட்டு விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பேசியபோது, மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் 75 சதவீதத்துக்கும் மேல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், திருந்திய நெல் சாகுபடியில் அனைத்துத் தொழில்நுட்பங்களையும் முறையாகக் கடைப்பிடித்து விவசாயிகள் அதிக லாபம் அடைய வேண்டும்.

ஊத்துக்கோட்டை, திருவொற்றியூர் ஆகிய வட்டங்களில் இணையம் மூலம் பட்டா வழங்கப்படும். மற்ற வட்டங்களில் விரைவில் இந்த வசதி செய்து தரப்படும். மாவட்டத்தில் முதற்கட்டமாக நந்திமங்கலம், இலுப்பூர், பாலவேடு, தேவம்பட்டு ஆகிய 4 கிராமங்களில் கால்நடை பட்டி (பவுண்டு) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

வேளாண்மைத் துறையினரால் தயாரிக்கப்பட்டுள்ள சிறுதானியங்கள் மூலம் பாரம்பரிய உணவுகள் தயாரிக்கும் முறை பற்றிய துண்டுப் பிரசுரத்தை மாவட்ட ஆட்சியர் வெளியிட, அதை அனைத்து விவசாயிகளும் பெற்றுக் கொண்டனர்.

பின்னர், கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில், திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத், மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, வேளாண் இணை இயக்குநர் முருகவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மழைநீர் சேகரிப்பின் மகத்துவம்**

விண்ணில் இருந்து மண்ணில் விழும் உயிர்நீர் மழைநீர். பூமியில் உயிரினங்கள் வாழவும், மண்வளம் செழிக்கவும் இயற்கை வழங்கும் கருணைக்கொடை.

எல்லா பொருள்களுக்கும் மாற்றுப் பொருள் உண்டு. மின்சார உற்பத்திக்கு அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம், அணு மின் நிலையம் என பல வழிகள் உண்டு. ஆனால், தண்ணீர் உற்பத்திக்கு மழை மட்டுமே ஆதாரம்.

மழை பெய்தால்தான் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அணைகள், ஏரி - குளங்களில் நீர் பெருகும். எனவே, எதிர்காலத் தேவைக்கு நாம் பணத்தை சேமித்து வைப்பதுபோல், வருங்கால சந்ததியினர் உயிர்வாழ மழைநீர் சேகரிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

பெருகிவரும் மக்கள் தொகையால் தண்ணீர் தேவை அதிகரித்து வரும் நிலையில், பருவநிலை மாற்றம், ஓசோன் படலம் பாதிப்பால் புவி வெப்பமாதல், நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் அளவுக்கு அதிகமாக நிலத்திலிருந்து நீர் உறிஞ்சப்படுதல் போன்ற காரணங்களால் உலகம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

இந்நிலை நீடித்தால் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு, உயிர்கள் மடியும் அபாயம் உருவாகும் என நாஸ0 விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் 2013-ஆம் ஆண்டு வரையில் உலகில் மக்கள் அதிகம் வாழும் நிலப் பரப்புகளில் முக்கியமான 37 பெரிய நிலப்பரப்புகளை ஆய்வு செய்ததில் நிலத்தடி நீர்மட்டத்தில் 13 நிலப்பரப்புகள் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளன என்றும் இதில் இந்தியாவில் உள்ள சிந்து நிலத்தடி நீர்ப்பரப்பு, குறைந்துவரும் வேகத்தில் 2-ஆவது இடத்தில் உள்ளதாகவும் நீரியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலகில் 16 சதவீதம் மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் நீர் வளம் வெறும் நான்கு சதவீதம் மட்டுமே. இந்நிலையில், நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்துவருவது அபாயகரமானது என நீர்வள நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தைப் பொருத்தவரை அனைத்து மாவட்டங்களிலும் நிலத்தடி நீரில் குளோரைடு, ஃபுளோரைடு, நைட்ரேட் போன்ற ரசாயனங்கள் வரையறுக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக உள்ளதாகவும், நிலத்திலிருந்து அதிகமாக தண்ணீர் உறிஞ்சப்படுவதே இதற்கு காரணம் என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்ததாக நிலத்தடி நீருக்கான மத்திய ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் 2011-ஆம் ஆண்டு நிலவரப்படி நிலத்தடி நீர்வளத்தில் 77 சதவீதம் குறைந்துவிட்டதாக மத்திய நீர் வாரியம் அதிர்ச்சித் தகவலை அண்மையில் வெளியிட்டது. இந்நிலை தொடர்ந்தால் வருகிற 2020-ஆம் ஆண்டு கடல்நீர் நிலப்பரப்புக்குள் புகும் அபாயம் உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். இதற்கிடையே, மனை வணிகத்தின் ஆதிக்கத்தால் தமிழகத்தில் ஏறக்குறைய 45 சதவீத குளங்கள் மாயமாகிவிட்டதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையைக் கட்டுப்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 2014-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் தேதி முக்கிய தீர்ப்பு ஒன்று வழங்கியது.

அந்தத் தீர்ப்பில், குளம், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் அமைந்துள்ள இடங்களில் வீடுகளோ, பிற கட்டடங்களோ கட்ட எக்காரணம் கொண்டும் அரசு அனுமதிக்கக் கூடாது என குறிப்பிட்டிருந்தது.

ஆனால், தமிழகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையங்கள், பல்வேறு துறைகளின் கட்டடங்களில் பெரும்பாலானவை நீர் நிலைகளிலோ அல்லது நீர்நிலை அருகிலோ கட்டப்பட்டுள்ளன.

மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் குப்பைகளைக் கொட்டும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவை நீர்நிலைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு தென் மாவட்டங்களில் இருந்து தலைநகர் சென்னைக்கு ரயிலில் பயணிக்கும்போது, இருபுறமும் ஆங்காங்கே தண்ணீர் நிரம்பிக் காணப்படும் நீர்நிலைகளும், பச்சைப்பசேல் என ரம்மியமாகக் காணப்படும் வயல்வெளிகளும் கண்களுக்கும் மனதுக்கும் விருந்தாக இருக்கும். நீர்நிலைகளுடனும், பயிர்களுடனும் உறவாடி வீசும் காற்று, நம்மை தழுவும்போது புத்துணர்ச்சி ஏற்படும். பயணக் களைப்பு தெரியாது. இதனால், ரயில் பயணம் என்றாலே மனது குதூகலிக்கும். ஆனால் தற்போதோ, சாதாரண வகுப்பில் ரயில் பயணம் என்றாலே உடல் உபாதையை விலை கொடுத்து வாங்குவதாக உள்ளது. ரயில் பாதையின் இருபுறமும் காணப்பட்ட நீர்நிலைகள் வறண்டும், ஆக்கிரமிப்பாலும் முகவரி இழந்து முகாரி ராகம் பாடுகிறது. காற்றில் சலசலக்கும் நெல்கதிர்களைச் சுமந்து நின்ற நெல் வயல்கள் இன்று கல் வயலாக கான்கிரீட் கட்டடங்களை சுமந்து நிற்கின்றன. இந்நிலை நீடித்தால், இயற்கையின் கொடையான மழை நீரை சேமிக்க முடியாமல், கடுமையான வறட்சி ஏற்பட்டு, உயிர்களின் சுழற்சியில் பாதிப்பு உண்டாகி, வருங்கால சந்ததியினரின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்.

எனவே, மழை நீரை உயிர்நீராகக் கருதி அதைச் சேமிக்க வேண்டும். இதற்கு மழை நீர் சேகரிப்பை மக்கள் இயக்கமாக்க அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும் முனைப்புடன் செயல்பட வேண்டும். மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை மாணவ - மாணவிகள் புரிந்துகொள்ளும் வகையில் பள்ளிப் பாடத் திட்டத்தில் மழைநீர் சேகரிப்பை கட்டாயப் பாடமாக்கவேண்டும். ஆன்மிகம், இலக்கியம், அரசியல் என அனைத்து தரப்பு கூட்டங்களிலும் மழை நீரைச் சேமிப்போம் என உறுதிமொழி எடுக்க வேண்டும். உள்ளங்கையில் உலகை அடக்கும் வகையில் தொழில்நுட்பத்தில்

வளர்ச்சியடைந்தாலும், உயிர்வாழ உணவு அவசியம். அந்த உணவை உற்பத்தி செய்ய தண்ணீர் முக்கியம்.

எனவே, "நீரின்றி அமையாது உலகு' என்னும் வள்ளுவர் வாக்கை நெஞ்சில் நிறுத்தி, இந்தப் பூமியை, எதிர்கால நமது சந்ததியினரைக் காக்க மழைநீர் சேகரிப்பை தலையாயக் கடமையாகக் கடைபிடிப்போம்.

**வெள்லலூர் சுற்றுவட்டாரத்தில் மழை**

மேலூர் சுற்றுவட்டாரத்தில் திங்கள்கிழமை மாலை இடி மின்னலுடன் பலத்த மழை சுமார் ஒரு மணிநேரம்பெய்தது.

இருதினங்களாகத் மாலைநேரத்தில் மழை பெய்தது வறட்சியை போக்குவதாக இருந்தது. விவசாயக் கிணறுகளில் தண்ணீர் பற்றாக்குறை நிலவும் நேரத்தில் இம்மழைபெய்தது மிகவும் பயனுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மாலைநேரத்தில் தடைப்பட்ட மின்சாரம் இரவு நீண்டநேரம்வரை விநியோகிக்கப்படவில்லை.

**குறுவை சாகுபடி: இலை சுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை**

குறுவை நெல் சாகுபடியில் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த வேளாண் துறை விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் சாரநாத் பாபு வெளியிட்டுள்ள செய்தி:

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, வாடிப்பட்டி, அலங்காநல்லூர் வட்டாரங்களில் குறுவை நெல் சாகுபடி 6,971 ஹெக்டரில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது பயிர் வளர்ச்சி மற்றும் பூக்கும் தருணத்தில் உள்ளது. இந்நிலையில் பல்வேறு கிராமங்களில் நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதல் காணப்படுவதாகத்

தெரியவந்துள்ளது.இதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

மஞ்சளான பழுப்புநிற இறக்கை உடைய தாய் அந்து பூச்சி இலையில் மஞ்சளான நிறத்தில் முட்டை இடுகின்றன. இதிலிருந்து வெளிவரும் புழு, பச்சை நிறத்தில் ஒளி கசியும் தன்மை கொண்டதாக இருக்கும். இலை சுருட்டுப்புழு தாக்கிய இலை,

நீளவாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். இலை வெள்ளையாக மாறி காய்ந்து விடும். அம்பை-16 ரகத்தில் இதன் தாக்குதல் அதிகமாக உள்ளது.

இதைக் கட்டுப்படுத்த, தேவைக்கு அதிகமாக தழைச்சத்து உரங்களை இடுவதைத் தவிர்க்க வேண்டும். இலை சுருட்டுப்புழு தாக்குதல் அதிகமாக இருந்தால் வேளாண் துறையினரின் ஆலோசனையைப் பெற்று மருந்து தெளிக்கலாம் என்றார்.

## கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் பூண்டு விளைச்சல் குறைவு விலை அதிகம்

கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் பூண்டு விளைச்சல் குறைந்து விலை அதிகமாக உள்ளது.

கொடைக்கானல் மேல்மலைக் கிராமங்களான வில்பட்டி,பூம்பாறை,மன்னவனூர், பூண்டி, கிளாவரை,போலூர்,குண்டுபட்டி உள்ளிட்ட கிராமங்களில் பணப் பயிராக பூண்டு விளைவிக்கப்படுகிறது.6-மாத காலப் பயிராக பூண்டு விளைவிக்கப்படுகிறது நல்ல மழையும்,தரமான உரம்,மண்ணின் தன்மை,பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்தி வந்தால் பூண்டு விளைச்சல் அதிகமாக கிடைப்பதோடு வெளி மார்க்கெட்டில் நல்ல விலையும் கிடைக்கும்.

மலைப் பூண்டு சிறந்த மருத்துவ குணம் கொண்டதாக இருப்பதால் இவை பெருமளவில் பல்வேறு சித்த மருத்துவத்தில் சேர்க்கப்படுகிறது புகைப் பூண்டு,பச்சைப் பூண்டு,ஒற்றைப் பூண்டு என சந்தையில் பல வகைகளில் விற்பனை செய்யப்படுகிறது

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும் ,பருவம் தவறிய பின் மழை தொடர்ந்து பெய்ததாலும் பூண்டு விளைச்சல் பாதிப்பு அடைந்துள்ளது.

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் விளையும் பூண்டை காயவைத்தும் புகை மூட்டமிட்டும் அவற்றை உலர வைத்து வடுகபட்டிக்கு கொண்டு செல்கின்றனர் அங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.பொதுவாக நல்ல விளைச்சல் இருந்தால் ஒரு கிலோ ரூ100-முதல் 120-வரை விற்பனை செய்யப்படும் ஆனால் தற்போது விளைச்சல் குறைந்த காரணத்தால் ஒரு கிலோ ரூ150-முதல் 180-வரை விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து மேல்மலைப் பகுதி பூண்டு விவசாய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது,

கொடைக்கானல் மலைப் பயிர்களில் பூண்டு மிகவும் சிறப்பு வாய்ந்த பயிராகும் தொடர்ந்து 50-ஆண்டுகளுக்கு மேலாக பூண்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது மலைப் பூண்டுக்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ளது கொடைக்கானல் மலைப்பகுதிகளில் விளைவிக்கப்பட்டு வரும் பூண்டின் மண் வளத்தை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள்

ஆராய்ச்சி செய்ய வேண்டும்.மானியமாக உரம் பூச்சி மருந்து கொடுக்க வேண்டும் விளைந்த பூண்டை தேக்கி வைப்பதற்கான குடோன் அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் விற்பனைக்காக 100-கிலோ மூட்டையாக வடுகபட்டி சந்தைக்கு கொண்டு செல்லப்படுகிறது அங்கு எடைக் கல் தராசு மூலம் எடை போடப்படுகிறது இதனால் பல்வேறு குளறுபடிகள் நடைபெறுகிறது.எனவே மார்க்கெட்டில் மின் தராசு வைக்க வேண்டுமென்பது விவசாயிகள் கோரிக்கையாகும்.

## கொடைக்கானலில் மழை நீரோடைகளில் நீர்வரத்து அதிகரிப்பு

கொடைக்கானலில் பெய்து வரும் தொடர் மழையால் நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

கொடைக்கானலில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர்வரத்து பகுதிகளான வெள்ளி நீர்வீழ்ச்சி,பியர்சோழா அருவி,பாம்பார் அருவி,வட்டக்கானல் அருவி,உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது.மேலும் கொடைக்கானல் ஏரி,பேரிஜம் ஏரி,நகராட்சி குடிநீர்த் தேக்கம்,மனோரஞ்சிதம் அனையின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

கொடைக்கானல் மட்டுமல்லாது மேல்மலைக் கிராமங்களிலும்,கீழ்மலைக் கிராமங்களிலும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளதால் விவசாயத்திற்கு ஏற்ற மழையாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விவசாயப் பணிகளை ஊக்குவிக்க 100 சதவிகித மானியத்தில் 376 உறை கிணறுகள்

விவசாயப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில், ராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 100 சதவிகித மானியத்தில், விவசாயிகளுக்கு மொத்தம் 376 உறை கிணறுகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக, திட்ட இயக்குநர் ஆ. பழனி தெரிவித்துள்ளார்.

271 கிலோ மீட்டர் நீளம் கடற்கரையைக் கொண்டுள்ளது ராமநாதபுரம் மாவட்டம். எனவே, கடற்கரையோரக் கிராமங்களில் கிணறு தோண்டும்போது, தண்ணீர் மிகக் குறைந்த ஆழத்திலேயே கிடைப்பதால், விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் அரசே உறை கிணறுகள் அமைத்துக் கொடுத்து வருகிறது.

ராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் இப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, ராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரக் கிராமங்கள் அதிகம் உள்ள திருப்புல்லாணி, மண்டபம்

ஒன்றியங்களில் உறை கிணறுகள், காங்கிரீட் கிணறுகள் அதிக அளவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருப்புல்லாணி ஒன்றியத்தில் தெற்குத்தரவை ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள உறை கிணறுகளை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஆ. பழனி, உதவி இயக்குநர் (ஊராட்சி) கல்யாணசுந்தரம், உதவிப் பொறியாளர் ஹேமலதா ஆகியோர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், இது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ஆ. பழனி தெரிவித்தது: ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தால், அவருக்கு 100 சதவிகித மானியத்தில் அவரது தோட்டத்திலேயே உறை கிணறு அமைத்து தரப்படுகிறது. 4 அடி அகலமும், 25 அடி ஆழமும் உடைய ஒரு உறை கிணறு அமைக்க ரூ. 40 ஆயிரமும், 6 அடி அகலமும், 18 அடி ஆழமும் உள்ள கான்கிரீட் கிணறு அமைக்க ரூ. 1 லட்சமும் மானியமாகத் தரப்படுகிறது. நடப்பு ஆண்டில், ராமநாதபுரம் மாவட்டத்தில் 300 விவசாயிகளுக்கு ரூ. 40 ஆயிரம் மதிப்பில் உறை கிணறுகளும், 200 விவசாயிகளுக்கு ரூ. 1 லட்சம் மதிப்பில் கான்கிரீட் கிணறுகளும் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதுவரை, மொத்தம் 150 கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன.

ஒன்றியங்கள் வாயிலாக, மண்டபம் 145, திருப்புல்லாணி 161, ராமநாதபுரம் 26,திருவாடானை 32, நயினார்கோவில் மற்றும் ஆர்.எஸ்.மங்கலத்தில் தலா 5, கடலாடி 2 என மொத்தம் 376 இடங்களில் கிணறுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம், சுமார் ஆயிரம் ஏக்கருக்கான விவசாயம் செழிப்புற்று விளைச்சல் பெருகும். இது விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிக்கும் திட்டமாக இருந்து வருகிறதுஎன்றார்.

**காண்டூர் கால்வாயில் தண்ணீர் திறப்பு**

பி.ஏ.பி. திட்டத்தின் உயிர் நாடியான காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணிகள் அண்மையில் முடிவடைந்ததால் அந்தக் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு திங்கள்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் துவங்கும் இக்கால்வாய் 49.3 கி.மீ. அடர்ந்த வனப்பகுதி வழியாக பயணம் செய்து திருமூர்த்தி அணையை அடைகிறது.

காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு அதிகபட்சமாக 1,150 கனஅடி வரை தண்ணீர் கொண்டு செல்ல முடியும். ஆனால், மரங்களின் வேர்கள் ஊடுருவியது உள்பட பல்வேறு காரணங்களால் இக்கால்வாயின் கரைகள் சேதமடைந்து 30 முதல் 40 சதவீதம் வரை தண்ணீர் விரயமானது. இதையடுத்து, காண்டூர் கால்வாய் ரூ.221.5 கோடியில் நடைபெற்ற புதுப்பிக்கும் பணிகள் அண்மையில் நிறைவடைந்தது. அதில், சுரங்கங்கள் உள்பட ஒரு சில இடங்களில் மட்டுமே சிறிய அளவிலான பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில், தூணக்கடவு அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், சர்க்கார்பதி நீர் மின்நிலையம் வழியாக காண்டூர் கால்வாயை திங்கள்கிழமை அடைந்தது. பிறகு, காண்டூர் கால்வாய் மூலம் இந்த நீர் திருமூர்த்தி அணையை சென்றடையவுள்ளது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், "முதற்கட்டமாக காண்டூர் கால்வாயில் 500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இது படிப்படியாக 1,000 கனஅடி வரை உயர்த்தப்படும். இந்த நீர் மூலம் சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்தில் தற்போது 12 மெகாவாட் மின் உற்பத்தி தொடங்கியுள்ளது' என்றனர்.

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் நெல் நடவு பணிகளை விரைந்து முடிக்க வேண்டுகோள்

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் நெல் நடவுப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கீழ்பவானி முறைநீர்ப் பாசன விவசாயிகள் சபை பகிர்மானக் கமிட்டித் தலைவர் கே.என்.செங்கோட்டையன், செயலர் பா.மா.வெங்கடாசலபதி ஆகியோர் தெரிவித்துள்ளதாவது:

பவானிசாகர் அணையிலிருந்து ஆகஸ்ட் 16-ஆம் தேதி ஒற்றைப்படை எண் பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 86 அடியாக இருந்தது. கோபி கோட்டத்தில் 51.7 மைல் வரை யு1 பாசன சபை முதல் யு பாசன சபை வரை சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் நடவுப் பணிகள் தற்போது துவங்கியுள்ளன. பாசனப் பகுதிகளில் மழையின்மை காரணமாக நடவுப் பணிகள் தாமதமாக துவங்கி நீர் பாய்ச்ச இயலாமல் ஒவ்வொரு மதகுப் பதியிலும் 1 முதல் 2 ஏக்கர் வரை மட்டுமே நடவுப்பணி செய்ய முடிகிறது. மேலும் சில இடங்களில் உழவு செய்து, வரப்பு கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பவானிசாகர் அணையின் தற்போதைய நீர்மட்டம் 66 அடி 9.5 டி.எம்.சி. ஆகும். இதேநிலை நீடித்தால் முறைப் பாசனம் அமல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி உழவு செய்து நடவுப் பணிகளை விரைந்து முடிக்கவேண்டும். நடவுப் பணிகளை அக்டோபர் முதல் வாரத்திற்குள் முடித்து, முறைப் பாசனத்தை அமல்படுத்த விவசாயிகள் ஒத்துழைப்புதர கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் மகசூல் பெற பாசன நீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

**ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை: அம்மாபேட்டையில் 53.2 மி.மீ. பதிவு**ஈரோடு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. அம்மாபேட்டையில் அதிகபட்சமாக 53.2 மி.மீ. மழைப் பதிவாகியுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில், கடந்த 2 நாள்களாக ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): அம்மாபேட்டையில் அதிகபட்சமாக 53.2 மி.மீட்டர் மழை பதிவானது. தாளவாடியில் 39, சென்னிமலையில் 22, வரட்டுப்பள்ளத்தில் 18, கொடுமுடியில் 16.2, மொடக்குறிச்சியில் 15, பவானிசாகரில் 11.2, கவுந்தப்பாடியில் 9.2, ஈரோட்டில் 9, பெருந்துறையில் 8, சத்தியில் 7.2, குண்டேரிப்பள்ளம் அணையில் 6, நம்பியூரில் 5 மி.மீட்டர் மழையும் பதிவானது.

**பருவ மழைக்கு ஏற்பவே தமிழகத்துக்கு தண்ணீர்**

பருவமழைக்கு ஏற்பவே காவிரியில் இருந்து தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விட முடியும் என்று, காவிரி மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் கர்நாடக அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது.

மத்திய நீர் வளத் துறை செயலாளர் சசிசேகர் தலைமையில் காவிரி மேற்பார்வைக் குழுவின் ஐந்தாவது கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் மத்திய நீர் ஆணையத் தலைவர் ஏபி பாண்டியா, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கே.ஞானதேசிகன், பொதுப் பணித் துறைச் செயலாளர் என்.எஸ்.பழனியப்பன், முன்னாள் பொதுப் பணித் துறைச் செயலாளரும், தமிழ்நாடு மின் பகிர்மானம், உற்பத்திக் கழக நிர்வாக இயக்குநருமான எம்.சாய்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கர்நாடக அரசின் தலைமைச் செயலாளர் கெப்சிக் முகர்ஜி, கேரள அரசின் நீர்வளத் துறைச் செயலாளர் வி.ஜே.குரியன், புதுச்சேரி அரசின் தலைமைச் செயலாளர் மனோஜ் பரிதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சம்பா நெல் சாகுபடியைக் காக்க நீர்: சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இக்குழுவின் கூட்டம் காலை 11 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1.15 மணி வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக அரசு சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை: உச்ச நீதிமன்ற உத்தரவின்படி காவிரியில் இருந்து செப்டம்பர் 24-ஆம் தேதி வரை 126 டி.எம்.சி தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை 78.451 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது. இன்னும் 47.549 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டியுள்ளது.

தமிழகத்தில் உள்ள காவிரி டெல்டா விவசாயிகள் சம்பா நெல் சாகுபடிக்காக தண்ணீர் இன்றி தவித்து வருகின்றனர். எனவே, தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், சம்பா பயிரைக் காப்பாற்றும் நோக்கிலும் தமிழகத்துக்குத் தர வேண்டிய எஞ்சிய நீரை கர்நாடக அரசு உடனே திறந்துவிட உத்தரவிட வேண்டும். மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு ஆகியவற்றை எவ்விதக் கால தாமதமும் இன்றி அமைக்க வேண்டும்.

இது தவிர, காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவின்படி கர்நாடக மாநிலம், பிலிகுண்டுலு பகுதியில் இருந்து 2015, அக்டோபர் முதல் 2016, ஜனவரி வரையிலும் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய 48 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட உத்தரவிட வேண்டும்.

மேலும், கர்நாடகத்தில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மேற்பார்வைக் குழு இதுவரை ஆய்வு செய்யவில்லை.

எனவே, அப்பகுதிகளில் தொடர்ந்து மேற்பார்வையிட வழிவகை செய்ய வேண்டும் என்று தமிழகம் கேட்டுக் கொண்டது. இதே கோரிக்கையை புதுச்சேரி அரசும் காவிரி மேற்பார்வைக் குழுவிடம் வலியுறுத்தியது.

கேரள அரசும் தங்களுக்கு உரிய நீர் பங்கீட்டு அளவைத் தருமாறு வலியுறுத்தியது.

கர்நாடகம் திட்டவட்டம்: "இந்த ஆண்டு பெய்ய வேண்டிய பருவமழையில் சராசரியைவிட 33 சதவீதம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீரின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. இப்போதுள்ள நீரின் அளவுக்கு ஏற்ப செப்டம்பர் 26-ஆம் தேதி நிலவரப்படி தமிழகத்துக்கு 82.3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட்டுள்ளோம். இதன்படி, தமிழகத்துக்கு உரிய பங்கீட்டு நீரை அளித்துள்ளோம். கர்நாடக மாநில மக்களின் குடிநீர்த் தேவை, விவசாயப் பயன்பாடு ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையும் உள்ளது.

எனவே, பருவமழையின் அளவைப் பொருத்தே தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது' என்று கர்நாடக அரசு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, மத்திய நீர் வளத் துறைச் செயலாளர் சசிசேகர், "காவிரி நடுவர் மன்ற உத்தரவின்படி தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வலியுறுத்தப்படுகிறது.

மேலும், இவ்விவகாரத்தில் இரு மாநிலங்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும்' என்றும் தெரிவித்ததாக அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இருப்பினும், இது குறித்து கர்நாடக அரசுத் தரப்பில் எந்த உறுதியும் அளிக்கப்படவில்லை.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

வேலூர், காட்பாடி காந்தி நகர் 10-ஆவது பட்டாலியன் தேசிய மாணவர் படை மாணவர்களின் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் திங்கள்கிழமை நடைபெற்றது.

என்சிசி மாணவர்களின் கூட்டு வருடாந்திர பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த ஊர்வலம் காட்பாடி, காந்தி நகர், டான்பாஸ்கோ மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இருந்து புறப்பட்டது. 10-ஆவது பட்டாலியனைச் சேர்ந்த பல்வேறு பள்ளிகள்,

கல்லூரிகளைச் சேர்ந்த 250 என்சிசி மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

ஊர்வலத்துக்கு பட்டாலியன் கமாண்டிங் அதிகாரி லெப்டினன்ட் கர்னல் ஆர்.சுரேஷ்குமார் தலைமை வகித்தார். முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இந்த ஊர்வலம் மீண்டும் முகாம் நடைபெற்ற டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தை அடைந்தது.

இதில், பட்டாலின் சுபேதார் மேஜர் பி.எஸ்.ராவட், சுபேதார்கள் ஆபிரகாம் ஜேக்கப், ராகேஷ்குமார், பயிற்சி பிரிவு சுபேதார் எம்.அழகர்சாமி, பட்டாலியன் அவில்தார் மேஜர் ஜி.சாந்தகுமார், அவில்தார்கள் ஜெயகுமார், மணிவண்ணன், தினேஷ், பட்டாலியன் மக்கள் தொடர்பு அலுவலர் க.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பருவமழை பற்றாக்குறை தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட முடியாது காவிரி கண்காணிப்பு குழு கூட்டத்தில் கர்நாடகம் அறிவிப்பு**



புதுடெல்லி,

பருவமழை பொய்த்து விட்டதால் தமிழ்நாட்டுக்கு மேலும் தண்ணீர் திறந்துவிட முடியாது என்று காவிரி கண்காணிப்பு குழு கூட்டத்தில் கர்நாடகம் தெரிவித்தது.

<u>கண்காணிப்பு குழு கூட்டம்</u>

காவிரி கண்காணிப்பு குழுவின் 5–வது கூட்டம் அதன் தலைவரும், மத்திய நீர்வளத்துறை செயலாளருமான சசிசேகர் தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் ஞானதேசிகன், பொதுப்பணித்துறை செயலாளர் பழனியப்பன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவரும், மேலாண்மை இயக்குனருமான டாக்டர் சாய்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கர்நாடக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் கவுசிக் முகர்ஜி, நீர்வளத்துறை செயலாளர் பி.வி.ராமமூர்த்தி, கேரள அரசின் சார்பில் நீர்வளத்துறை பொறியாளர் பி.ஜே.குரியன் மற்றும் புதுச்சேரி அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் மனோஜ் பரிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

<u>தமிழக அரசு கோரிக்கை</u>

இந்த கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் வருமாறு:–

காவிரியில் கர்நாடகம் போதிய அளவு தண்ணீர் திறந்து விடாததால் சம்பா பருவ பயிர் பாதிக்கப்பட்டு உள்ளது. செப்டம்பர் மாதம் 24–ந் தேதி நிலவரப்படி கர்நாடகம் 47.549 டி.எம்.சி. தண்ணீர் பாக்கி வைத்து உள்ளது. அந்த பாக்கியை கர்நாடகம் பூர்த்தி செய்ய வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பில் கூறியபடி அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் தமிழகத்துக்கு பிலிகுண்டுலு பகுதிக்கு

வந்து சேரவேண்டிய 48 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிடுமாறு கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும்.

<u>கூடுதலாக பயன்படுத்திய கர்நாடகம்</u>

2014–2015–ம் ஆண்டில் கர்நாடகம் 103 டி.எம்.சி. நீரைத்தான் பயன்படுத்த வேண்டும். ஆனால் கூடுதலாக 37 டி.எம்.சி. தண்ணீரை பயன்படுத்தி இருக்கிறது.

கர்நாடக அணைகளுக்கு எவ்வளவு தண்ணீர் வருகிறது? அதில் எவ்வளவு தண்ணீரை கர்நாடகம் பயன்படுத்துகிறது? அதன் மூலம் எவ்வளவு நிலப்பரப்பில் பாசனம் செய்கிறது? என்ற விவரங்களை கண்காணிக்க ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். கோடைகால பாசனத்துக்கு கர்நாடகம் தண்ணீர் எடுக்காமல் இருப்பதை கண்காணிப்பு குழு உறுதி செய்ய வேண்டும். மீதம் இருக்கும் தண்ணீரை அடுத்த பாசனத்துக்கு பகிர்ந்து கொள்ளுமாறு கர்நாடகத்தை வற்புறுத்தவேண்டும்.

கடந்த 2013–ம் ஆண்டு மே 10–ந் தேதி சுப்ரீம் கோர்ட்டில் அளித்த உத்தரவாதத்தின்படி, காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி ஒழுங்குமுறை குழுவையும் மத்திய அரசு தாமதம் இன்றி அமைக்க வேண்டும்.

மேற்கண்ட கருத்துகள் தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டன.

<u>தண்ணீர் திறந்துவிட முடியாது</u>

ஆனால், கூட்டத்தில் கலந்து கொண்ட கர்நாடக அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட இயலாது என்று கூறினார்கள்.

கூட்டத்தில் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:–

பருவமழை பொய்த்ததால் கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து உள்ளது. இந்த ஆண்டில் 67 சதவீதம் தான் மழை பெய்துள்ளது. 33 சதவீதம் மழை பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக கர்நாடக மாநிலத்தில் காவிரி பாசன பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். எங்களால் இயன்றவரை தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து

விட்டு இருக்கிறோம். ஏற்கனவே செப்டம்பர் 26–ந் தேதி வரை தமிழகத்துக்கு 82.3 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு கோரும் தண்ணீர் அளவை திறந்து விட முடியாது.

பருவமழை பொய்த்ததன் காரணமாக வழக்கமான நடைமுறையின்படி தண்ணீர் திறந்து விட முடியாத நிலை இருப்பதால், நெருக்கடி கால சூழ்நிலையின்படி தண்ணீரை பகிர்ந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

மத்திய அரசு யோசனை

மத்திய அரசின் சார்பில் கலந்து கொண்ட அதிகாரிகள் பேசுகையில், பற்றாக்குறை சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதால் கர்நாடகம்–தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களும் தண்ணீரை பகிர்ந்துகொள்வதில் ஒத்துழைத்து செயல்பட வேண்டும் என்று யோசனை தெரிவித்தனர்.

## மகளிர் சுயஉதவி குழுக்களின் செயல்பாட்டுக்காக 20 ஆயிரம் பெண்களுக்கு ‘அம்மா கைபேசி’: சட்டசபையில் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

தமிழக சட்டசபையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா 110 விதியின் கீழ் நேற்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

<u>மகளிர் சுயஉதவி குழுக்கள்</u>

மகளிருக்கு சமூக பொருளாதார அதிகாரம் வழங்கிடவும், அதன்மூலம் வறுமை ஒழிக்கும் நோக்கத்துடனும் சுயஉதவி குழுக்களை எனது தலைமையிலான அரசு 1991–ம் ஆண்டு உருவாக்கியது.

மேலும் ஏழை, எளிய, நலிவுற்ற மக்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிற்காக 2005–ம் ஆண்டு எனது தலைமையிலான அரசு உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தையும் தொடங்கிவைத்தது. அதன் பயனாக, மகளிர் சுயஉதவி குழுக்கள் தமிழ்நாட்டில் மாபெரும் சக்தியாய் உருவெடுத்து, இன்று 6.08 லட்சம் மகளிர் சுயஉதவி குழுக்கள் 92 லட்சம் உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

<u>பயிற்றுநர்கள்</u>

தமிழ்நாட்டில் சுயஉதவி குழுக்களை ஒருங்கிணைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் 20 முதல் 25 சுயஉதவி குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுயஉதவி குழுக்களை மேற்பார்வையிட சமுதாய சுயஉதவி குழு பயிற்றுநர்கள் உள்ளனர்.

சுயஉதவி குழுவில் ஊக்குநராக செயல்பட்ட அனுபவமிக்க உறுப்பினர்களே சமுதாய சுயஉதவி குழு பயிற்றுநர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் புதிய சுயஉதவி குழுக்களை அமைப்பதற்கும், பயிற்றுவிப்பதற்கும் துணைபுரிந்து வருகின்றனர்.

<u>அம்மா செல்போன் திட்டம்</u>

மகளிர் சுயஉதவி குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு, அவர்களுக்குள் கொடுத்துக்கொள்ளும் உட்கடன்

விவரம், கடனை மீளச்செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்யவும், அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி கணினி மயமாக்கப்பட்ட செல்போன்கள் வழங்கப்படும். அம்மா செல்போன் திட்டம் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும்.

முதற்கட்டமாக, 20 ஆயிரம் சமுதாய சுயஉதவி குழு பயிற்றுநர்களுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்மா செல்போன்களை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

## தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும் சட்டசபையில் அமைச்சர் ஆனந்தன் அறிவிப்பு



சென்னை,

தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் ஆனந்தன் அறிவித்தார்.

ஒரு கோடி மரக்கன்று

தமிழக சட்டசபையில் வனத்துறைக்கான மானிய கோரிக்கை மீது எம்.எல்.ஏ.க்கள் விவாதித்தனர். அவர்களுக்கு பதில் அளித்து பேசியபின்

அந்த துறையின் அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:–

2015–16–ம் ஆண்டில் உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் ஐந்தாவது ஆண்டு பணிகளாக, உயிர்ப்பன்மை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் 1.02 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்யும் பணிகளும் ரூ.115.31 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

<u>தனி அலுவலகம்</u>

தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்தும் வகையில் மாநில பல்லுயிர் வாரியத்திற்கு தனியாக அலுவலகம் அமைக்கப்படும். மேலாண்மை குழுக்கள் அமைக்கவும், மக்கள் பங்களிப்புடன் 25 குழுக்களை உருவாக்கவும், மாவட்ட, வட்டார அளவில் விழிப்புணர்வு திட்டங்களை ஏற்படுத்தவும், ஐந்து புராதன பல்லுயிர் பெருக்க இடங்களை அறிவிக்கவும் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் அறிவிப்புகளை வெளியிட்டார்.

<u>வட்டியில்லாக் கடன்</u>

குன்னூரில் உள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்திற்கு குறுகியகால வட்டியில்லாக் கடனாக ரூ.30 கோடி நிதி வழங்கப்படும். 5 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் இந்த தொகை, 31.7.15 வரை தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் (திருச்சி) மற்றும் அரசு ரப்பர் கழகம் (நாகர்கோவில்) நிறுவனங்களிடம் இருந்து பெற்ற கடன் தொகையான ரூ.20.89 கோடி அசல் மற்றும் வட்டியினை திருப்பி செலுத்த பயன்படுத்தப்படும்.

அதோடு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், தொழிலாளர்கள், ஓய்வுபெற்ற ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கவேண்டிய தொகையான ரூ.7.52 கோடி தொகையை வழங்க பயன்படுத்தப்படும்.

மேலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு அடுத்து வரும் 3 மாத காலத்திற்கான செலவுக்கான ரூ.1.59 கோடி, நடைமுறை மூலதனமாக வழங்க பயன்படுத்தப்படும்.

<u>வன கால்நடை மருத்துவ மையங்கள்</u>

மனித மற்றும் வன–உயிரின மோதல்கள் நிகழும் நிலப்பரப்பினை கருத்தில் கொண்டு அதிகப்படியான கால்நடை அலுவலர் குழுக்களை அமைப்பது அவசியமாகிறது. அதன்படி ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று வன கால்நடை மருத்துவ மையங்கள் அமைக்கப்படும்.

மாநில முதுநிலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள 163 செ.மீ.க்கு குறைவான உயரம் உள்ள தோட்டக்காவலர்கள் மற்றும் சமூக வனப் பணியாளர்கள், தமிழ்நாடு வனச் சார்நிலைப்பணி விதிகளின்படி, முறையாக வனக்காவலர் பணியிடங்களில் பணியமர்த்த தகுதியற்றவர்களாகிறார்கள். எனவே, 89 வன ஓய்வு விடுதி காவலர் மற்றும் 117 சமையலர், காலி பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படும், இவ்வாறு உபரியாக ஏற்படுத்தப்படும் 206 வன ஓய்வு விடுதி காவலர் மற்றும் சமையலர், காலி பணியிடங்களில், மாநில முதுநிலைப் பட்டியலில் இடம்பெற்று வனத்துறைக்காகவே பணியாற்றிவரும் தோட்டக்காவலர்கள், சமூக வன ஊழியர்கள் பணி அமர்த்தப்படுவார்கள்.

<u>முந்திரி உற்பத்தி</u>

கோவையில் தமிழ்நாடு வன பயிற்சியகம் உள்ளது. மனித, வன உயிரின மோதல்கள், பருவநிலை மாற்றம் ஆகியவற்றுக்கான தனிச்சிறப்பு மையம் அங்கு அமைக்கப்படும்.

தமிழ்நாடு வனத் தோட்டக்கழகத்தின் வருவாயைப் பெருக்கும் வகையில் உயர்தர படியாக்கம் செய்யப்பட்ட கன்றுகளைக் கொண்டு தைலத் தோட்டங்களும், உயர்ரக முந்திரி ஒட்டுக்கன்றுகளைக் கொண்ட முந்திரித் தோட்டங்களும் உற்பத்தி செய்யப்படும். இந்த ஆண்டு முந்திரிப் பருப்புகளை வெளிச்சந்தையில் விற்பனை செய்ய ஜெயங்கொண்டத்தில் முந்திரி பதப்படுத்தும் பிரிவு ஏற்படுத்தப்படும்.

காட்டுயானை முன்னெச்சரிக்கை

காட்டு யானைகளின் நடமாட்டத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியாததால் பல மனித உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே ஒரு முன்மாதிரி நடவடிக்கையாக, வால்பாறையில் ஆறு வெவ்வேறு வழித்தடங்களில் இயங்கும் உள்ளூர் பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு தகவல் இணைப்பின் வாயிலாக யானைகள் நடமாட்டம் குறித்து தெரிவிக்க, உடனுக்குடன் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் அமைப்பு, தமிழ்நாடு வனத்துறை, அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு ஏற்படுத்தப்படும். எனவே யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளுக்குச் செல்வதை மக்கள் தவிர்க்கலாம். இவ்வாறு அவர் அறிவிப்புகளை வெளியிட்டார்.

## குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த புதிய திட்டங்கள்: சென்னையின் வருங்கால குடிநீர் தேவைக்காக நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

சென்னையின் வருங்கால குடிநீர் தேவைக்காக நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா 110 விதியின் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ள குடிநீர் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

<u>நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்</u>

சென்னை பெருநகர் பகுதியில் 280 நீர் நிலைகள் உள்ளன. இந்த நீர் நிலைகள் தொன்று தொட்டு சென்னை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றன. வளர்ந்து வரும், நகரமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் காலப்போக்கில் இந்நீர் நிலைகள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன.

சென்னை மாநகரின் எதிர்கால குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்கான நீராதாரங்களை உறுதி செய்யும் வகையில் இந்நீர் நிலைகளை பாதுகாத்து, அவற்றின் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவதற்கான உடனடி தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, குடிநீர் தேவைக்கென பருவ மழையை பெருமளவில் சார்ந்திருத்தல், பெருகி வரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் நகரமயமாக்கல், குறைந்த எண்ணிக்கையிலான மேற்பரப்பு நீர்நிலைகள் ஆகிய சவால்களை எதிர்கொள்ளவும், சென்னை மாநகரின் வருங்கால குடிநீர் தேவை நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகவும், நீராதாரங்களை பாதுகாத்து, சீரமைப்பதற்காக, நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்படும்.

இந்த இயக்கத்தின் கீழ், பெரிய அளவிலான குடியிருப்பு வளாகங்கள், அரசு கட்டடங்கள், கல்லூரிகள், பள்ளிகள் போன்ற பெரும் வளாகங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை வடிவமைத்து நிர்மாணித்தல் மூலம் மேம்படுத்தப்பட்ட மழை நீர் சேகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை மாநகரில் 15 பெரும் வளாகங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த வளாகங்களில் மாதிரி பணிகள் மேற்கொள்ளப்படும். மழை நீர் வடிகால்களில் பெறப்படும் மழை நீர், சேகரிக்கப்பட்டு, நீரூற்று கிணறுகள் மூலம் நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படும். இதற்கான மாதிரி பணிகள், தெரிவு செய்யப்படும் 2 இடங்களில் செயல்படுத்தப்படும்.

<u>நீர் சேகரிப்பு கட்டமைப்பு</u>

மேலும், நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், அவற்றை மாசுப்படுத்தும் ஆதாரங்களை கண்டறிதல், கழிவு நீர், குப்பைகள் சேருவதை தடுத்தல், கரைகளை மேம்படுத்துதல், வேலி அமைத்தல், நீரூற்று கிணறுகள், நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல், மழை நீர் வடிகால்களை நீர் நிலைகளுடன் இணைத்தல் போன்ற பணிகளின் மூலம் நீராதாரங்களை சீரமைத்து, நீர் சேமித்தல் மேம்படுத்தப்படும். இதற்கான மாதிரி பணிகள் சென்னை பெருநகர் பகுதியில் அமைந்துள்ள தெரிவு செய்யப்படும், 15 ஏரிகளில் மேற்கொள்ளப்படும்.

இது மட்டுமல்லாமல், மறு சுழற்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட நீரைக் கொண்டு நீர் நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இந்த இயக்கத்தின் மேற்குறிப்பிடப்பட்ட மாதிரி பணிகள் மொத்தம் ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

<u>திடக்கழிவு மேலாண்மை</u>

ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் அளவிற்கு அரசு வழங்கி வரும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் கீழ், முதற்கட்ட குப்பை சேகரிப்பு, இரண்டாம் நிலை குப்பைகளை எடுத்துச் செல்லுதல் பணிகளுக்கான பல்வேறு நவீன வகை தொட்டிகள், உபகரணங்கள், குப்பைகளை கையாளும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை

கட்டமைப்பு வசதிகள், திடக்கழிவில் இருந்து எரிவாயு, மின்சாரம் தயாரிக்கும் வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இதன் மூலம் நிதி நிலைமை வலுவாக இல்லாத நகர்ப்புர உள்ளாட்சிகள் உள்ளிட்ட அனைத்து நகர்ப்புரங்களிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு, 10 நகராட்சிகள் மற்றும் 214 பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு, மேலாண்மை பணிகள் 69 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

<u>எண்ணூர்–மணலிக்கு ரூ.117 கோடியில் மேம்பாலம்</u>

போக்குவரத்து நெரிசல் மிகுந்த எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் கொருக்குப்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கிடையே ரெயில்வே சந்திக் கடவுகள் முறையே 2ஏ மற்றும் 2பி ஆகியவை அமைந்துள்ளன. இந்த இரண்டு சந்திக் கடவுகளிலும் நாளொன்றுக்கு மொத்தம் 14 முறை ரெயில் போக்குவரத்திற்கு ஏதுவாக வாகன போக்குவரத்து நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் நிறுத்தப்படும் வேகமாக செல்லக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு சுமார் 42,000 என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மாநிலத்தின் தொழிற் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கிலும், பொதுமக்களின் சிரமத்தை நீக்கும் வகையிலும், கால நேரம் மற்றும் எரிபொருள் சேமிப்பை கருத்திற் கொண்டும், மேற்படி சந்திக் கடவுகளுக்கு மாற்றாக எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் ஒருங்கிணைந்த மேம்பாலம் 117 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

எண்ணூர் நெடுஞ்சாலையில், இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கின் வாயில் முதல், வைத்தியநாதன் மேம்பால சந்திப்பிற்கு முன்னர் வரை மேம்பாலம் அமையும். இதே போன்று, மணலி சாலையில், இந்திய

எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பின் மேம்பாலத்தில் தொடங்கி தற்போதுள்ள தரைப் பாலத்திற்கு முன்னர் முடியும் வகையில் மேம்பாலம் அமைக்கப்படும்.

கோபுர மின் விளக்குகள்

இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பிற்கு மேலாக ''டி'' வடிவில் அமையவுள்ள இந்த ஒருங்கிணைந்த மேம்பாலத்தில், எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்படும். மேலும், இந்திய எண்ணெய் நிறுவன கிடங்கு சந்திப்பு மற்றும் வைத்தியநாதன் மேம்பால சந்திப்புகள் அகலப்படுத்தப்பட்டு, நடை பாதைகள், மழை நீர் வடிகால்கள், சாலை குறியீடுகள், உயர் கோபுர மின் விளக்குகள் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டு, இப்பகுதிகள் மேம்படுத்தப்படும். இந்த ஒருங்கிணைந்த மேம்பாலம், எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் போக்குவரத்தை சீராக்க பெருமளவில் பயன்படும்.

கழிவு நீர் அகற்றும் வசதிகள்

* சென்னை மாநகரத்துடன் இணைக்கப்பட்டுள்ள 42 பகுதிகளில் 36 பகுதிகளுக்கு குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 8 பகுதிகளுக்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 20 பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 4 பகுதிகளுக்கான பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மற்ற பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டங்களை மேற்கொள்ள தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைளின் ஒரு பகுதியாக சென்னை மாநகரத்துடன் தெற்கு பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 11 பகுதிகளான பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஜல்லடாம் பேட்டை, ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் கொட்டிவாக்கம் ஆகியவற்றில் உற்பத்தியாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சோழிங்கநல்லூரில் கூடுதலாக

நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட மின் உற்பத்தி செய்யும் அமைப்புகளுடன் கூடிய புதிய கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையம் 65 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையிலும், மின் உற்பத்தி செய்யும் அமைப்புகளுடன் கூடிய வகையிலான இந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளால் தென் சென்னை பகுதியில் வாழும் சுமார் ஒரு லட்சம் மக்கள் பயனடைவார்கள்.

<u>புதிய குடிநீர் குழாய்கள்</u>

* சென்னை மாநகரின் கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, மகாகவி பாரதியார் நகர், புதிய மற்றும் பழைய வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, ராயபுரம், பெரம்பூர், வியாசர்பாடி, அம்பத்தூர், முகப்பேர், அண்ணா நகர், கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், அயனாவரம், எழும்பூர், சேத்துப்பட்டு, ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், மைலாப்பூர், பட்டினப்பாக்கம், வடபழனி, தியாகராய நகர், அரும்பாக்கம் மற்றும் வேளச்சேரி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் புதிய குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய் பதிக்கும் பணிகள் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

<u>அபிவிருத்தி பணிகள்</u>

* சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட தண்டையார்பேட்டை மண்டலத்தில் 15 வார்டுகள் உள்ளன. இம்மண்டலத்தில் வசிக்கும் பெரும்பாலானவர்கள், ஏழை எளிய மக்கள் ஆவர். இம்மண்டலத்திற்குட்பட்ட பல சாலைகளில் சேவை துறையினர் பல்வேறு பணிகளை மேற்கொண்டதால் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே, பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அவற்றினை சீரமைப்பது அவசியமாகிறது. மேலும், இப்பகுதியில் பூங்காக்கள், பொது கழிப்பிடங்கள், உடற்பயிற்சி கூடங்கள், சத்துணவு

கூடங்கள் ஆகியவைகள் அமைக்கப்படுவதுடன் மாநகராட்சி பள்ளிகளும் சீரமைக்கப்பட வேண்டும்.

எனவே, சென்னை மாநகராட்சி தண்டையார் பேட்டை மண்டலத்தில் மேற்கூறிய அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். 9 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் 119 தார் சாலைகள் மேம்படுத்தப்படும். 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் சாலைகளின் பெயர் பலகைகள் நிறுவப்படும். 2 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் 12 பூங்காக்கள் சீரமைக்கப்படும். 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 20 பள்ளிக் கூடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும். ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் 31 பொது கழிப்பிடங்கள் நவீனப்படுத்தப்படும்.

<u>எல்.இ.டி. மின் விளக்குகள்</u>

1 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கூடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும். 1 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் 18 சத்துணவு மையங்களில் அபிவிருத்தி பணிகள் செயல்படுத்தப்படும். 1 கோடி ரூபாய் செலவில் மயான பூமி மற்றும் இடுகாடு புனரமைக்கப்படும். மேலும் சலவைக் கூட கட்டடங்களில் அபிவிருத்தி பணிகள் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சுகாதார மையங்கள் அபிவிருத்தி பணிகள் 1 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும். 6,000 எண்ணிக்கையிலான எல்.இ.டி மின் விளக்குகள் 15 கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படும். மொத்தத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

<u>பேருந்து நிழற் குடைகள்</u>

* சென்னை மாநகராட்சி பகுதியில் 1,260 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் 750 பேருந்து நிறுத்தங்களில் நவீன பேருந்து நிழற் குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் எஞ்சியுள்ள

510 பேருந்து நிறுத்தங்களில் 51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன பேருந்து நிழற் குடைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் பி.ஓ.டி. முறையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

துப்புரவு பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை

* தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பொது சுகாதார பிரிவில் பணி புரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டை வழங்கப்பட்டு வருகிறது. அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்கிட வேண்டும் என துப்புரவு பணியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். துப்புரவு பணியாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டு முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்கப்படும். இவ்வாறு ஜெயலலிதா பேசினார்.

## தமிழக காடுகளில் புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பு



சென்னை,

சந்தன மரக்கட்டைகள் பொது ஏலம் மூலம் 51.43 மெட்ரிக் டன் அளவு விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு வருவாயாக ரூ.38.36 கோடி ஈட்டப்பட்டுள்ளது. தேக்கு மரக்கட்டைகள் பொது ஏலம் மூலம் 1,054.96 கன மீட்டர் விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு வருவாயாக ரூ.2.98

கோடி ஈட்டப்பட்டுள்ளது. சமூகக்காடுகள் தோட்டங்களில் முதிர்ந்த மரங்கள் விற்பனை மூலம் ரூ.17.76 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

*2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழக காடுகளில் 163 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2014–ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 229 ஆக அதிகரித்துள்ளது.

இந்த தகவல் கொள்கை விளக்க புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹலகூரில் சூறைக்காற்றுடன் கனமழை: 1,100 வாழை மரங்கள் சாய்ந்தன



ஹலகூர்,

மண்டியா மாவட்டம் ஹலகூரில் கடந்த 2 நாட்களாக சூறைக்காற்றுடன் பலத்த மழை கொட்டி வருகிறது. இந்த நிலையில் சூறைக்காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் நேற்று முன்தினம் கொல்லரஹள்ளியை

சேர்ந்த மது என்பவருக்கு சொந்தமான வாழை தோட்டத்தில் 500 வாழை மரங்களும், ஆனந்த் என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் 6 வாழை மரங்களும் சாய்ந்தன. இதனால் அவர்களுக்கு ரூ.2 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் தங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஹலகூர் தாசில்தாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நெய்வேலியில் ரூ.75 கோடி செலவில் சூரியஒளி மின் நிலையம்



நெய்வேலி

நெய்வேலியில் ரூ.75 கோடி செலவில் சூரியஒளி மின்நிலையத்தை என்.எல்.சி. தலைவர் சுரேந்தர் மோகன் தொடங்கி வைத்தார்.

என்.எல்.சி. நிறுவனம் தற்போது பழுப்பு நிலக்கரியில் இயங்கும் மின்நிலையங்கள் மட்டுமல்லாது, நிலக்கரியின் மூலம் செயல்படும் அனல்மின் நிலையங்கள், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையான,

காற்றாலை மற்றும் சூரியஒளி மூலம் மின் சக்தி உற்பத்தி செய்யும் மின் நிலையங்களை அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

<u>பசுமை மின் நிலையம்</u>

அந்தவகையில், நெய்வேலியில் 10 மெகாவாட் திறன்கொண்ட, சூரிய ஒளி ஆற்றல் மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யும் மின் நிலையத்தை நெய்வேலியில் அமைத்துள்ளது. ரூ. 74 கோடியே 60 லட்சம் செலவில் உருவாக்கப்பட்ட இந்த புதுப்பிக்கவல்ல ஆற்றல் துறை சார்ந்த மின் நிலையம், என்.எல்.சி. நிறுவனத்தால் முதல் முறையாக அமைக்கப்பட்ட பசுமை மின் நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நேற்று என்.எல்.சி. தலைவர் சுரேந்தர் மோகன் தொடங்கி வைத்தார்.

<u>48 ஆயிரம் சூரிய ஒளி தகடுகள்</u>

54 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இம்மின் நிலையத்தில், ஒவ்வொன்றும் தலா 240 வாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் 48 ஆயிரம் சூரிய ஒளியைக் கிரகிக்கும் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இத்தகடுகள் மூலம் சேகரிக்கப்படும் ஒளி ஆற்றலானது நேர்மின்னோட்ட மின்சக்தியாக மாற்றப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் மின்சாரமானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் தொகுப்பிற்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், முதல் ஆண்டில் 1 கோடியே 64 லட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சோதனை முயற்சியாக மட்டும், இதுவரை சுமார் 8 லட்சத்து, 60 ஆயிரம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி, தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில், கழுநீர்க்குளம் என்றக் கிராமத்தில் 51 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் நிலையத்தை என்.எல்.சி. அமைத்துவருகிறது.

<u>தேசிய சூரிய மின்சக்தி திட்டம்</u>

பசுமை ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில் இந்திய அரசு தேசிய சூரிய மின் சக்தித்திட்டம் ஒன்றை உருவாக்கி, 2022ம் ஆண்டிற்குள் 1 லட்சம்

மெகாவாட் மின்சக்தியை சூரியஒளி மூலம் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்தில், என்.எல்.சி. நிறுவனம் தன்னையும் இணைத்துக் கொண்டு, 4 ஆயிரம் மெகாவாட் சூரியசக்தி மின் நிலையங்களை அமைக்கத்திட்டமிட்டுள்ளது.

இதன் முதல்கட்டமாக, நெய்வேலியில் கூடுதலாக 130 மெகாவாட் சூரியஒளி மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ராஜஸ்தான் மாநிலம் பர்சிங்சரில் ரூ. 167 கோடியே 29 லட்சம் செலவில் 25 மெகாவாட் சூரிய மின் நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களின் மூலம் என்.எல்.சி. நிறுவனத்தின் மொத்த மின் உற்பத்தி அளவு பலமடங்கு அதிகரிப்பதுடன், சுற்றுச்சூழலைப் பாதிக்காத புதுப்பிக்கவல்ல ஆற்றல் துறையிலும் இந்நிறுவனம் நாட்டின் முன்னோடியாகத் திகழ உள்ளது.

<u>கலந்து கொண்டவர்கள்</u>

இவ்விழாவில் என்.எல்.சி. இயக்குனர்கள் சரத்குமார் ஆச்சார்யா, ராக்கேஷ்குமார், பூபதி, தங்கபாண்டியன், என்.எல்.சி. முன்னாள் மின்துறை இயக்குனர் ராஜகோபால், கண்காணிப்புத்துறை தலைமை அதிகாரி ஷிவ்ராஜ்சிங், என்.எல்.சி. மின்துறை செயல் இயக்குனர் சுரேஷ்பாபு, நெய்வேலி புதிய அனல்மின் நிலைய செயல் இயக்குனர் ஸ்ரீதர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கடலூர் பெரு நகராட்சியில் 10 ஆயிரம் மரகன்றுகள் நடும் திட்டம்



கடலூர்

கடலூர் நகராட்சியில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை நகரசபை தலைவர் குமரன் தொடங்கி வைத்தார்.

தூய்மை இந்தியா திட்டம்

தூய்மை இந்தியா திட்டம் தொடங்கி ஓராண்டு நிறைவடைய இருப்பதையொட்டி கடலூர் பெருநகராட்சி வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நேற்று நடைபெற்றது. இதில் நகரசபை தலைவர் குமரன் மரகன்றை நட்டு வைத்தார். தொடர்ந்து துணை தலைவர் சேவல் குமார், நகரசபை ஆணையர் முருகேசன் மற்றும் கவுன்சிலர்கள் மரகன்றுகளை நட்டு வைத்தனர்.

இதில் நகர்நல அதிகாரி சிவகுமார், கவுன்சிலர்கள் பாலகிருஷ்ணன், அன்பு, தமிழ்செல்வி அசோகன், ராமச்சந்திரன், சுகந்திராஜு, பிருந்தாசங்கர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர். பின்னர் இது குறித்து ஆணையர் முருகேசன் கூறியதாவது:–

10 ஆயிரம் மரகன்றுகள்

தூய்மை இந்தியா திட்டம் ஓராண்டு நிறைவு பெற இருப்பதையொட்டி கடலூர் நகராட்சியில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதன் தொடக்கமாக நகரசபை அலுவலக வளாகத்தில் மரகன்றுகள் நடும் விழா நடைபெற்றுள்ளது. இதன் பின்னர் நகராட்சியில் கழிவுநீரேற்று நிலையம், சுகாதார வளாகம், நீரேற்று நிலையம் போன்ற நகராட்சிக்கு சொந்தமாக உள்ள கட்டிட வளாகங்களிலும், காலி இடங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன.

இது தவிர பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பேச்சு, கட்டுரை, வினாடி வினா போட்டிகள் ஒவ்வொரு பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றன. இதில் முதல் 3 இடங்களை பிடிக்கும் மாணவ, மாணவிகளுக்கு நாளை(புதன்கிழமை) பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## கரூர் மாவட்டத்தில் பலத்த மழை: நீரில் மூழ்கி பயிர்கள் சேதம்; சாலையோர மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன



கரூர் மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக பயிர்கள் நீரில் மூழ்கி சேதம் அடைந்தன. சாலையோர மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

பலத்த மழைகரூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது.

இதனால் கரூரை அடுத்த வாங்கல், பஞ்சமாதேவி, நெரூர், திருமுக்கூடலூர் பகுதிகளில் உள்ள விவசாயபயிர்களான நெல், கோரை உள்ளிட்ட பயிர்கள் நீரில் மூழ்கி சேதம் அடைந்தன.

தேங்கி கிடக்கிறது

மேலும் பஞ்சமாதேவியில் இருந்து நெரூர் செல்லும் சாலையோரத்தில் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்து கீழே விழுந்தன. கரூர் திண்ணப்பா நகர், காந்திகிராமம் உள்பட கரூர் நகர பகுதியில் பல்வேறு பகுதியில்

சாலையில் அதிக அளவு மழை நீர் தேங்கியது. மேலும், பல்வேறு இடங்களில் மழை நீர் செல்வதற்கு போதிய வடிகால் வசதி இல்லாததால் ஆங்காங்கே மழை நீர் தேங்கி கிடக்கிறது. இதனால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டது. மழை நீர் தேங்கி இருப்பதால் பல்வேறு இடங்களில் நேற்று காலை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. நேற்று முன்தினம் பெய்த மழையால் சமீபத்தில் பாழம்மாள்புரம்-பஞ்சமாதேவி சாலையில் போடப்பட்ட பாலத்தின் ஒரு பகுதி சேதம் அடைந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோல் குளித்தலை, லாலாப்பேட்டை பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் வாழை, கரும்பு, வெற்றிலைகொடி உள்ளிட்ட பயிர்களை மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மழையின் அளவுகரூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:அரவக்குறிச்சி-16, குளித்தலை-37, மாயனூர்-56, கரூர்-76, அணைப்பாளையம்-22, தோகைமலை-40, பஞ்சப்பட்டி-58, பாலவிடுதி-11, கடவூர்-14, கிருஷ்ணராயபுரம்-80, மயிலம்பட்டி-82 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் சேதம் இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை



நாமகிரிப்பேட்டை பகுதிகளில் பலத்த காற்றுடன் பெய்த மழையின் காரணமாக ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் சாய்ந்து விழுந்து சேதம் அடைந்தன. சேதமடைந்த வாழை மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். பலத்த மழைநாமக்கல் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக அவ்வப்போது நல்ல மழை பெய்து வருகிறது. இதேபோல ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் கடந்த 2 நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

நாமகிரிப்பேட்டை பகுதியில் நேற்று முன்தினம் மாலை தொடங்கிய மழை இரவு நீண்ட நேரம் வரை விட்டு விட்டு பெய்தது. வாழைமரங்கள் சாய்ந்தன இதில் அரியாகவுண்டம்பட்டியை சேர்ந்த விவசாயிகள் செல்வராஜ், ஜெகதீஸ்வரன், தங்கவேல் ஆகியோரது விவசாய நிலங்களில் இருந்த ஆயிரக்கணக்கான பூவாழை, ஏலக்கி, ரஸ்தாளி ரக வாழை மரங்கள் குலையுடன் சாய்ந்து சேதமடைந்தன. அதேபோல் மூலப்பள்ளிப்பட்டி, அரியாகவுண்டம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, தண்ணீர்பந்தல்காடு உள்ளிட்ட இடங்களில் கனமழை காரணமாக ஏராளமான வாழை மரங்கள் சாய்ந்து சேதமாகின. சுமார் 15

ஏக்கர் பரப்பளவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் கன மழையில் சாய்ந்ததால் லட்சக்கணக்கான ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பீடு ஏற்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. விவசாயிகள் கோரிக்கைஇந்த மழையின் காரணமாக பலத்த இழப்பு ஏற்பட்டு உள்ளதாக கூறிய வாழை விவசாயிகள், சேதமடைந்த வாழை மரங்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மழையின் காரணமாக நேற்று முன்தினம் நாமகிரிப்பேட்டையில் உள்ள தனியாருக்கு சொந்தமான சினிமா தியேட்டர் அருகே புளிய மரம் ஒன்று சாய்ந்து சாலையில் விழுந்தது. சம்பவ இடத்திற்கு நாமகிரிப்பேட்டை போலீசார் விரைந்து சென்றனர். அவர்கள் பொதுமக்கள் உதவியோடு மரத்தை அப்புறப்படுத்தினர். இதன் காரணமாக நாமகிரிப்பேட்டையில் ஆத்தூர் - ராசிபுரம் சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதித்தது.

## இடியுடன் கூடிய பலத்த மழை: கூடலூர்– ஊட்டி தேசிய நெடுஞ்சாலையில் மரம் விழுந்தது இருளில் மூழ்கிய கிராமங்கள்



கூடலூரில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ததால் கூடலூர்– ஊட்டி தேசிய நெடுஞ்சாலையில் மரம் விழுந்தது. இதனால் பல்வேறு கிராமங்கள் இருளில் மூழ்கின.

<u>பலத்த மழை</u>

நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் தாலுகாவில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நீர்நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. மேலும் அடிக்கடி மின்தடையும் ஏற்பட்டு வருகிறது. இதேபோல் தொலைபேசி, இணையதள சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

கூடலூரில் நேற்று இடியுடன் பலத்த மழை பெய்ததால் கூடலூர்– ஊட்டி தேசிய நெடுஞ்சாலையோரம் மாலை 4 மணிக்கு மரம் ஒன்று மின்கம்பம் மீது சரிந்து விழுந்தது. இதனை தொடர்ந்து மின்வாரிய அதிகாரிகள் மின் வினியோகத்தை துண்டித்தனர். இதனால் பல்வேறு கிராமங்கள் இருளில் மூழ்கின.

<u>மின்தடை</u>

பின்னர் கூடலூர் தீயணைப்பு நிலைய அலுவலர் அனில்குமார் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மின்கம்பம் மீது விழுந்து கிடந்த மரத்தை மின்வாள்கள் கொண்டு அறுத்து எடுத்தனர். இதனால் ½ மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பந்தலூர் தாலுகாவில் பெய்து வரும் கனமழையால் நேற்று முன்தினம் மாலை ஏலமன்னாவில் மின்கம்பத்தில் இருந்த உபகரண பொருட்கள் வெடித்து சிதறின. இதனால் ஏலமன்னா, கொளப்பள்ளி, அய்யன்கொல்லி, நெல்லியாளம் டேன்டீ, அம்பலமூலா, உள்பட பல்வேறு பகுதிகளில் இரவு 8 மணி வரை மின்தடை ஏற்பட்டது.

தகவல் அறிந்த மின் வாரியத்துறையினர் விரைந்து சென்று சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். அதன் பின்னர் மின் வினியோகம் சீரானது.

<u>இயல்பு வாழ்க்கை பாதிப்பு</u>

இதேபோல் அய்யன்கொல்லி அருகே கோழிச்சால் பகுதியில் உயர் அழுத்த மின் கம்பியில் பழுது ஏற்பட்டது. இதனால் அம்பலமூலா, நம்பியார்குன்னு, நரிக்கொல்லி உள்பட பல கிராமங்கள் இருளில் மூழ்கின. மேலும் பிஎஸ்.என்.எல் சேவையும் பாதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதி அடைந்தனர்.

சேரங்கோடு அரசு தேயிலை தோட்டம் ரேஞ்ச் எண். 2 திருவள்ளுவர் நகர் பகுதியில் மின்கம்பங்கள் சாய்ந்தன. இதனால் அப்பகுதி இருளில் மூழ்கின. மேலும் பந்தலூரில் இருந்து உப்பட்டி செல்லும் சாலையில் பல இடங்களில் சிறு சிறு மண் சரிவுகள் ஏற்பட்டன. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

## இலை சுருட்டை நோய் தாக்குதலால் வெற்றிலை சாகுபடி பாதிப்பு விவசாயிகள் கவலை



தேனி,

இலை சுருட்டை நோய் தாக்குதல் காரணமாக வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>வெற்றிலை சாகுபடி</u>

தேனி மாவட்டத்தில் பெரியகுளம் அருகே உள்ள வாடிப்பட்டி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் வெற்றிலை சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது. அதேபோல சின்னமனூர், உப்புக்கோட்டை, போடி மீனாட்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும் குறிப்பிட்ட அளவில் விவசாயிகள் வெற்றிலை கொடிக்கால் அமைத்துள்ளனர்.

உப்புக்கோட்டை, போடி மீனாட்சிபுரம் பகுதிகளில் உள்ள வெற்றிலை கொடிக்காலில் தற்போது இலை சுருட்டை நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால் இலைகள் வளர்ச்சி இன்றி சுருங்கி வருகிறது. மருந்து தெளித்தும் இந்த நோயை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

<u>குறைந்து விட்டது</u>

இந்த பாதிப்பு குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

வெற்றிலை கொடிக்காலில் இலை சுருட்டை நோயை கட்டுப்படுத்த முடியவில்லை. சின்னமனூர் பகுதிகளில் ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி நடந்தது. இலை சுருட்டை, வேர் அழுகல் போன்ற நோய்களால் இந்த சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது. தற்போது எஞ்சிய வெற்றிலை கொடிக்காலும் அழிந்து வருகிறது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வரை ஒரு கிலோ வெற்றிலை ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது விலை உயர்ந்து ஒரு கிலோ ரூ.85 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதற்கிடையே தற்போது வெற்றிலையின் பயன்பாடு பெருமளவில் குறைந்து விட்டதால் போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## மண்புழு உரம் தயாரிக்கும் பணி மத்திய அரசு அதிகாரிகள் ஆய்வு



நன்னிலம் பேரூராட்சியில் மண்புழு, திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்பட்டு வருகிறது. அதாவது நன்னிலம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு, இதற்கு என இடம் தேர்வு செய்யப்பட்டு, மண்புழு உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனை டெல்லியில் இருந்து வந்த மத்திய அரசு செயலாளர் கவுரிசங்கர்ஜா தலைமையிலான 13 அதிகாரிகளை கொண்ட குழுவினர் பார்வையிட்டனர். பின்னர் அவர்கள் மண்புழு தயாரிக்கும் பணிகளை ஆய்வு செய்தனர்.மேலும் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.25 லட்சம் செலவில், 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணியினையும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது பேரூராட்சி தலைவர் ராணிசுவாதிகோபால், உதவி செயற்பொறியாளர் ராஜா, செயல் அலுவலர் செந்திலன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கல்வராயன்மலையில் கொட்டி தீர்த்த கனமழை: கோமுகி அணை நீர்மட்டம் 7 அடி உயர்ந்தது



கல்படை ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணை நிரம்பி மழை வெள்ளம் கொட்டுவதை படத்தில் காணலாம்.

கச்சிராயப்பாளையம்

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன்மலையில் நேற்று முன்தினம் இரவு கனமழை கொட்டியதால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் மலைகிராம சாலையில் மண் சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்து தடைப்பட்டது. மேலும் கோமுகி அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

கனமழை

தமிழகத்தில் விரைவில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், தற்போது வெப்பச்சலனம் காரணமாக பரவலாக மழை பெய்துவருகிறது. இந்நிலையில், அடுத்த 3 நாட்களுக்கு கனமழை

பெய்யும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்து இருந்தது. அதன்படி, கடந்த சில நாட்களாக விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன் மலை பகுதியில் பரவலாக மழை பெய்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வானில் கருமேகங்கள் சூழ்ந்தது. 2 மணி அளவில் மழை பெய்ய தொடங்கியது. இடி, மின்னலுடன் 2 மணி நேரம் வரையில் கன மழை கொட்டி தீர்த்தது.

<u>வெள்ளப்பெருக்கு–மண் சரிவு</u>

இதனால் மலைப்பகுதியில் உள்ள நீர் வீழ்ச்சிகளில் தண்ணீர் அதிகளவில் கொட்டியது. கல்படை ஆற்றில் படகுகுழாம் அமைந்திருக்கும் இடத்தில் உள்ள தடுப்பணை நிரம்பி வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது.இதன் மூலம் மல்லிகைபாடி, பரங்கியநத்தம், கல்படை போன்ற மலை கிராமங்களில் இருந்து கச்சிராயப்பாளையத்துக்கு வரும் சாலையின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தில் வெள்ளநீர் சீறி பாய்ந்து சென்றது. எனவே இப்பகுதியில் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது. நேற்று மதியம் வரையில் மலை கிராமங்களுக்கு இந்த வழியாக பஸ் இயக்கப்படவில்லை. கிராம மக்கள் வெள்ளநீர் குறைந்தபின் நடந்தே சென்றனர்.

இதேபோல் வெள்ளிமலை–குண்டியாநத்தம் செல்லும் சாலையில் மண் சரிவு ஏற்பட்டது. இதனால் இந்த வழியாக போக்குவரத்து தடைப்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்த நெடுஞ்சாலைத்துறையினர் விரைந்து வந்து பொக்லைன் இயந்திரம் மூலமாக மண் சரிவை சரிசெய்தனர். இதை தொடர்ந்து மீண்டும் இந்த வழியாக போக்குவரத்து தொடங்கியது.

<u>கிடுகிடு உயர்வு</u>

இந்த மழை காரணமாக, மலை அடிவாரத்தில் இருக்கும் கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அதாவது நேற்று முன்தினம் மாலை வரையில் கல்படை, பொட்டியம் ஆகிய ஆறுகள் வழியாக 130 கன அடி அளவில் தண்ணீர் வரத்து இருந்தது. கனமழையால் ஆறுகளில்

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 1,500 கன அடி அளவில் தண்ணீர் வந்தது. இதன் மூலம் அணையின் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது.

46 அடி கொள்ளளவு கொண்ட அணை நேற்று முன்தினம் 33½ அடி என்கிற நிலையில் இருந்தது. தண்ணீர் வரத்து அதிகரிப்பால் ஒரே நாளில் 7 அடி உயர்ந்து 39½ அடியாக நீர் இருக்கிறது. நேற்று காலையில் மலைப்பகுதியில் மழை இல்லாததால் அணைக்கு தண்ணீர் வரத்து 700 கன அடியாக குறைந்தது. இதேபோல் சங்கராபுரம் மணிநதி ஆற்றிலும் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

<u>திருக்கோவிலூரில் 21 மி.மீ. மழை</u>

மாவட்டத்தில் நேற்று குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பரவலாக மழை பெய்து இருக்கிறது. இதில் கல்வராயன் மலை பகுதியை தொடர்ந்து, திருக்கோவிலூரில் 21 மி.மீ., செஞ்சியில் 5 மி.மீ., கள்ளக்குறிச்சியில் 8 மி.மீ. என்கிற நிலையில் மழை பதிவாகி இருந்தது. விழுப்புரத்தில் மழையேதும் பெய்யவில்லை.

தி இந்து

தமிழால் இணைவோம்

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை: தமிழகத்துக்கு 14 ஆயிரம் கன அடி நீர் திறப்பு_



காவிரி உற்பத்தியாகும் குடகு மாவட்டத்தில் தலைக்காவிரியில் கடந்த இரு தினங்களாக கனமழை பெய்து வருகிறது. மேலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான பாகமண்டலா, மடிகேரி, குஷால்நகர் ஆகிய இடங்களிலும் மழை தொடர்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குடகு மாவட்டத்தில் நேற்று முன் தினம் 78 மிமீ மழை பதிவானது.

இதனால் மண்டியா மாவட் டத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித் துள்ளது. நேற்று முன் தினம் கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நொடிக்கு 3 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனால் 124.80 அடி மொத்த கொள்ளளவு கொண்ட அணையில் 102.10 அடி நீர் இருப்பு இருந்தது.

இரு தினங்களாக கன மழை பெய்து வருவதால் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 7 ஆயிரம் கன அடி நீர் வந்துக்கொண்டிருக்கிறது. இதனால் கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 103.53 அடியாக உயர்ந்துள்ளது.

இதையடுத்து தமிழகத்துக்கு நொடிக்கு 14 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனை கண்டித்து மைசூருவில் கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தின் கர்நாடக நீர் நிர்வாக கழகத்தின் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தின் தலைவர் மாதே கவுடா கூறும்போது, " காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஜூன், ஜூலை மாதங்களில் பருவ மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்படும். இதனால் ஜூலை மாத இறுதியிலோ, ஆகஸ்ட் மாத தொடக்கத்திலோ கிருஷ்ணராஜ சாகர் அணை முழுவதுமாக நிரம்பும். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து வறட்சி நிலவியதால் கிருஷ்ணராஜசாகர் அணை 75 சதவீதம் கூட நிரம்பவில்லை.


இதனால் பாசனத்துக்காக நீர் திறக்கப்படாததால் கரும்பு பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் கோடை காலத்தில் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்நிலையில்

தமிழகத்து நீர் திறந்துவிடுவதை ஏற்க முடியாது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளின் கனமழை பெய்து கிருஷ்ணராஜசாகர் அணை முழுக் கொள்ளளவை எட்டும் வரை நீர் திறந்துவிடக் கூடாது"என்றார்.

கடந்த இரு தினங்களாக இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதில் மின்னல் தாக்கி சித்ரதுர்கா மாவட்டத்தில் மஞ்சுநாத் (52), நரசிங்கப்பா (32), தொட்டய்யா (48), உமேஷ் (28) ஆகிய 4 பேரும் பலியாகினர். தும்கூரு மாவட்டத்தில் கல்லூரி மாணவர் ரவிசங்கர் (19), விவசாயி அஞ்சப்பா (50) ஆகியோர் பலியாகினர். மாநிலம் முழுவதும் இடி மின்னலுக்கு 7 பேர் காயமடைந்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## இறைச்சி பதம் காட்டும் மீட்டர்







இறைச்சியை சரியான பதத்தில் வேகவைக்க உதவுகிறது இந்த தெர்மோ

மீட்டர். இது மொபைல் ஆப்ஸ் மூலம் இயங்குவதால் இறைச்சி சரியான பதம் ெவந்ததும் போனுக்கு மெசேஜ் வந்துவிடும்.

**நீருக்குள் ஆய்வு**

நீருக்கு அடியில் ஆய்வு செய்ய புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். கேமரா மற்றும் சென்சார்கள் கொண்ட இந்த கருவியை மட்டும் தண்ணீருக்குள் அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

**லேசர் விளையாட்டு**

செல்ல பிராணிகள் விளையாடுவதற்காக ஒபி என்கிற லேசர் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளனர் இரண்டு அமெரிக்கர்கள். மொபைல் மூலமாக இதை இயக்கி செல்ல பிராணிகளுக்கு விளையாட்டு காட்டலாம்.

## காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை: தமிழகத்துக்கு 14 ஆயிரம் கன அடி நீர் திறப்பு



காவிரி உற்பத்தியாகும் குடகு மாவட்டத்தில் தலைக்காவிரியில் கடந்த இரு தினங்களாக கனமழை பெய்து வருகிறது. மேலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான பாகமண்டலா, மடிகேரி, குஷால்நகர் ஆகிய இடங்களிலும் மழை தொடர்வதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குடகு மாவட்டத்தில் நேற்று முன் தினம் 78 மிமீ மழை பதிவானது.

இதனால் மண்டியா மாவட் டத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித் துள்ளது. நேற்று முன் தினம் கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நொடிக்கு 3 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

இதனால் 124.80 அடி மொத்த கொள்ளளவு கொண்ட அணையில் 102.10 அடி நீர் இருப்பு இருந்தது.

இரு தினங்களாக கன மழை பெய்து வருவதால் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 7 ஆயிரம் கன அடி நீர் வந்துக்கொண்டிருக்கிறது. இதனால் கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 103.53 அடியாக உயர்ந்துள்ளது.

இதையடுத்து தமிழகத்துக்கு நொடிக்கு 14 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனை கண்டித்து மைசூருவில் கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தின் கர்நாடக நீர் நிர்வாக கழகத்தின் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக கர்நாடக மாநில விவசாயிகள் சங்கத்தின் தலைவர் மாதே கவுடா கூறும்போது, " காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஜூன், ஜூலை மாதங்களில் பருவ மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்படும். இதனால் ஜூலை மாத இறுதியிலோ, ஆகஸ்ட் மாத தொடக்கத்திலோ கிருஷ்ணராஜ சாகர் அணை முழுவதுமாக நிரம்பும். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து வறட்சி நிலவியதால் கிருஷ்ணராஜசாகர் அணை 75 சதவீதம் கூட நிரம்பவில்லை.

இதனால் பாசனத்துக்காக நீர் திறக்கப்படாததால் கரும்பு பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் கோடை காலத்தில் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்நிலையில் தமிழகத்து நீர் திறந்துவிடுவதை ஏற்க முடியாது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளின் கனமழை பெய்து கிருஷ்ணராஜசாகர் அணை முழுக் கொள்ளளவை எட்டும் வரை நீர் திறந்துவிடக் கூடாது"என்றார்.

கடந்த இரு தினங்களாக இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதில் மின்னல் தாக்கி சித்ரதுர்கா மாவட்டத்தில் மஞ்சுநாத் (52), நரசிங்கப்பா (32), தொட்டய்யா (48), உமேஷ் (28) ஆகிய 4 பேரும் பலியாகினர். தும்கூரு மாவட்டத்தில் கல்லூரி மாணவர் ரவிசங்கர் (19),

விவசாயி அஞ்சப்பா (50) ஆகியோர் பலியாகினர். மாநிலம் முழுவதும் இடி மின்னலுக்கு 7 பேர் காயமடைந்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## இந்தியாவில் புதிதாக 9 காட்டு வகைக் காளான்கள் கண்டுபிடிப்பு



கிழக்கு இமயமலைப்பகுதியில் குறிப்பாக சிறிய மலை மாநிலமான சிக்கிம் தாவரவியலாளர்களுக்கும், காளானியல் அறிஞர்களுக்கும் மற்றும் இயற்கைவியலாளர்களுக்கும் ஒரு புதையலாக அமைந்துவருகிறது.

2015ல் மட்டும் 9 விதமான (பூஞ்சைகளின் ராஜ்யத்தைச் சேர்ந்த) காட்டுவகை காளான் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குறைந்தது ஒருவகை இனக் காளான்களை உள்ளூர் மக்கள் உட்கொண்டும் பாராட்டியுள்ளனர்.

இந்திய தாவரவியல் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த வகை காளான்களை வடக்கு சிக்கிம் பகுதியில் குறிப்பாக ஊசியிலைக் காடுகள் நிறைந்த சபல்பைன் காடுகளில் கண்டறிந்துள்ளனர். ஒன்பது இனங்களில் நான்கு பெரிய அளவு பாலை வெளியேற்றி பால்

தொப்பிகளை உண்டாக்கும் பண்புகளைக் கொண்ட லேக்டேரியஸ் இனத்தைச் சார்ந்தது.

இந்த புதிய வகை பூஞ்சை இனங்கள் இயற்கையின் பருவகாலங்களில் குறிப்பாக மழைக்காலங்களில் முளைக்கும் காளான்களாக இருக்கின்றன. இவ்வுயிரினங்கள், தாவர இனங்களின் மூலக்கூறு முறைப்படுத்தல்கள் மற்றும் நுண் உருவப் படிப்புகள் மூலமாக உள் மற்றும் வெளிப்புற ஆய்வுகளின் வாயிலாக நிறுவப்பட்டுள்ளன என்று புதிய உயிரினங்களைக் கண்டறிந்த இந்திய தாவரவியல் கழக விஞ்ஞானி கனாத் தாஸ் தி இந்துவுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

கனாத் தாஸ், தனது குழுவினரோடு இணைந்து புதிய காளான் உயிரிகளைக் கண்டறிய சிக்கிம் பகுதிகளில் நான்குமுறை ஆய்வுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார்.இவற்றில், கேந்த்ரலெஸ் சிக்கிமென்சிஸ் எனும் உண்ணத்தக்க தாவர இனம் ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தாவர இனங்கள் உயரமாகவும் ஒல்லியாகவும் உண்ணுவதற்கு சுவையாகவும் இருப்பதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். இந்தியத் துணைக்கண்டத்தில் இவ்வகை தாவர பேரினங்கள் மற்ற இனவகை காளான்களைவிட இரண்டுமடங்கு பெரியதாக வளரக்கூடிய தனித்துவம் கொண்டதாகும். மற்ற காளான் வகைகள் 3-4 அங்குலம் உயரம் வளரும் என்றால் இவை 6 லிருந்து 7 அங்குலம் உயரம் வரை வளரக்கூடியது.

சுவையான இன்னொரு வகையாக ஆஸ்ட்ராபொலெடஸ் ஆப்லிவ்சியோக்லுஷினோசஸ் எனப்படும் ஒரு தாவரக் குடும்பத்தைச்சேர்ந்த காளான் இனத்தை இவர்கள் குழு கண்டறிந்துள்ளது. இவ்வகைக் காளான்கள் சிறியதாகவும் மிகவும் பிரகாசமான வண்ணங்கள் கொண்டதாகவும் இருக்கும். காட்டில் இவ்வகை களான்கள் இருக்குமிடத்தைக் கண்டறிந்தபோது அங்கு காளான் தலைமீது எண்ணற்ற ஈக்கள் சுற்றிவந்து கொண்டிருப்பதைக் கண்டோம். அதற்குக் காரணம் இவ்வகைக் காளான்களில் இருக்கும் நறுமணமும் அதன் வண்ணமும்தான் என்கிறார் விஞ்ஞானி கனாத் தாஸ்.

காட்டின் வளர்ச்சிக்கு உணவு, தொழிற்சாலை மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கும் கூட காளான்கள் உள்ளிட்ட பூஞ்சைகளின் பங்களிப்பு மிகமிக முக்கியமானது. இத்தகைய காளான்வகைக் கண்டுபிடிப்புகள் ஆய்வுலகில் புதிய சாத்தியங்களையும் புதிய உணவுப் பயன்பாடுகளையும் உருவாக்கியிருக்கிறது என்கிறார் இந்திய தாவரவியல் ஆய்வுக்கழக இயக்குநர் பரம்ஜித் சிங்.

இந்தியாவில், இதுவரை சுமார் 2000 காளான் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் 12 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் வரை காளான்கள் (சிறிய வகை பூஞ்சைகள்) கண்டறியப்பட்டுள்ளன.

உலகம் முழுவதும் 5.1 மில்லியன் பூஞ்சையினங்கள் காணப்படுவதாக நம்பப்படுகிறது. இவற்றில் 1.03 லட்சம் உயிரினங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தினகரன்

**டெல்லியில் பசுமை மற்றும் சமையல் கழிவுகளைக் கொண்டு உரம் தயாரிப்பு**



புதுடெல்லி: பசுமை கழிவுகள் மற்றும் சமையல் கழிவுகளைக் கொண்டு உரம் மற்றும் இயற்கை எரிவாயுவை தயாரிக்கலாம் என பசுமை ஆர்வலர்கள் யோசனை தெரிவித்துள்ளனர். செடி, மரங்களிலிருந்து


விழும் இலைகள், புற்கள் உள்ளிட்ட பசுமை கழிவுகளையும், சமையல் கழிவுகளையும் சேர்த்து ஸ்வாலம்பன் என்ற நிறுவனம் மூலம் உரம் தயாரித்துவரும் நிபுணர் நரேந்தர குமார் கூறியதாவது: பூங்கா மற்றும் சமையல் கழிவுகளைக் கொண்டு பயனுள்ளதாக உபயோகிக்கும் வகையில் உரம் மற்றும் இயற்கை எரிவாயு தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் தினமும் கழிவுகள் எறியப்படுகின்றன. இதனை சேகரித்து சுற்றுச்சூழலுக்கு பாதிக்காத வகையில் உரம், இயற்கை எரிவாயு தயாரிக்கப்படுகிறது.இத்திட்டத்தை செயல்படுத்த 300 வீடுகளுடன் கைகோர்க்கப்பட்டுள்ளது. தற்போது குடியிருப்பு அருகில் உள்ள பூங்காக்களில் மட்டுமே உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் மேம்படுத்த டெல்லி மேம்பாட்டு ஆணையத்திடம் 4-5 இட வசதிக் கொண்ட பூங்காக்கள் வழங்கும்படி காரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பெரிய அளவில் கொண்டுவர மூன்று மாநகராட்சிகள் மற்றும் மாநில அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளோம். இவ்வாறு நரேந்தர குமார் கூறினார்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்வு**



மேட்டூர்: கர்நாடக மாநிலத்தில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வந்த மழை நேற்று முன்தினம் குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 27,442 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 22,444 கனஅடியாக சரிந்தது. நேற்று முன்தினம் 68.20 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 69.15 அடியாக உயர்ந்தது. கடந்த 2 நாட்களில் மட்டும் 2.49 அடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர்: நாசா அறிவிப்பு



வாஷிங்டன்: செவ்வாய் கிரகத்தில் கோடை காலத்தில் தண்ணீர் திரவ நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக நாசா அறிவித்துள்ளது. இதனால் அங்கு மனிதர்கள் வசிக்கக் கூடிய சூழ்நிலை குறித்த சாத்தியக்கூறுகள் தொடர்பான ஆய்வுகளை விஞ்ஞானிகள் முடுக்கி விடவுள்ளனர். மார்ஸ் ரீகனயனஸன்ஸ் ஆர்பிட்டர் (எம்.ஆர்.ஓ) மூலம் கிடைத்துள்ள தகவல்களை ஆய்வு செய்து பார்த்து இந்த முடிவுக்கு நாசா வந்துள்ளது. முன்பு எப்படி அபரிமிதமாக அங்கு தண்ணீர் இருந்ததோ

அதேபோல இப்போதும் அங்கு தண்ணீர் இருப்பதாக கூறுகிறது நாசா. செவ்வாயில் உள்ள மலைப் பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும், தரைப்பரப்பிலும் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தண்ணீர் குளிர்காலத்தில் உறைந்து போய்க் காணப்படுகிறது. வெயில் காலத்தில் திரவ நிலைக்கு மாறி ஓடுகிறது. இதுகுறித்து தகவல்களை நேற்று வாஷிங்டனில் வெளியிட்டுப் பேசினார் நாசாவின் அறிவியல் இயக்குநரகத்தின் உதவி நிர்வாகியும், விண்வெளி வீரருமான ஜான் கிரின்ஸ்பெல்ட்.
அவர் கூறுகையில், நீண்ட காலமாக நாம் யூகங்களின் அடிப்படையில் சந்தேகப்பட்டு வந்ததை தற்போது அறிவியல் பூர்வமாக உறுதி செய்துள்ளோம். தண்ணீர் இருக்கிறதா என்ற நீண்ட கால தேடுதலுக்கு முடிவு கண்டுள்ளோம். அங்கு தண்ணீர் உள்ளது.இது ஒரு மிக முக்கியமான முன்னேற்றம். இன்றளவும் செவ்வாயின் தரையில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது என்பது உறுதியாகியுள்ளது.

இந்தத் தண்ணீரானது குளிர்காலத்தில் உறை நிலையில் உள்ளது. இவை ஹைட்ரஜன் மூலக்கூறுகளாக மாறிய நிலையில் கண்டறியப்பட்டுள்ளன. இந்த உறைநிலை தண்ணீரானது உப்புப் படிவத்துடன் காணப்படுகிறது. செவ்வாயின் பல பரப்புகளிலும் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். நீர் ஆதாரம் கண்டறியப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு உயிரினங்கள் வசிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள், உயிர் வாழத் தேவையான பிற அம்சங்கள் உள்ளதா என்பது குறித்த ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு 100 விவசாயிகள் சுற்றுலா



சென்னை: சட்டப்பேரவையில் நேற்று முதல்வர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் படித்த அறிக்கை:

* தமிழகத்தில் வேளாண் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற பண்ணை இயந்திரங்கள் வாங்க ரூ.80 கோடி மானியம் வழங்கப்படும்.

* வேளாண் பயிர்களில் நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் செயல்படுத்துவதற்காக ரூ.65 கோடியே 30 லட்சம் செலவிடப்படும்.

* நடப்பாண்டில் ரூ.29 கோடியே 67 லட்சம் செலவில் பயிர்களுக்கு உற்பத்தி மானியம் மற்றும் விநியோக மானியம் வழங்கப்படும்.

* நவீன பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலை பயிர் சாகுபடியை மேற்கொள்ள ரூ.56 கோடியே 76 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

* நடப்பாண்டில் 1.29 லட்சம் ஏக்கரில் நுண்ணீர் பாசன திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென ரூ.296 கோடியே 96 லட்சம் செலவிடப்படும்.

* 100 முன்னோடி விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்களில் நன்கு முன்னேறியுள்ள வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும். இது மட்டுமல்லாது, நமது நாட்டில், பிற மாநிலங்களில் பின்பற்றி வரும் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள உள்நாட்டு கல்வி சுற்றுலாவுக்கு 10,000 விவசாயிகள் அழைத்து செல்லப்படுவார்கள்.

* காய்கறி சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் விநியோகிக்கும் திட்டம் திருச்சி மற்றும் மதுரை மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

**சுய உதவி குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசி திட்டம் : ஜெயலலிதா அறிவிப்பு**



சென்னை: சமுதாய சுய உதவி குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசி திட்டம் என்ற புதிய திட்டம் துவக்கப்படும் என்று ஜெயலலிதா கூறினார். சட்டப்பேரவையில் நேற்று முதல்வர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் படித்த அறிக்கை: தமிழகத்தில் இன்று 6.08 லட்சம் மகளிர் சுய உதவி குழுக்கள் 92 லட்சம் உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன. சுய உதவி குழுக்களை ஒருங்கிணைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் 20 முதல் 25 சுய உதவி குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவி குழுக்களை மேற்பார்வையிட சமுதாய சுய உதவி குழு பயிற்றுநர்கள் உள்ளனர். சுய உதவி குழுவில் ஊக்குநராக செயல்பட்ட அனுபவமிக்க உறுப்பினர்களே சமுதாய சுய உதவி குழு பயிற்றுநர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர்.

இவர்கள் புதிய சுய உதவி குழுக்களை அமைப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் துணை புரிந்து வருகின்றனர். மகளிர் சுய உதவி குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு, அவர்களுக்குள் கொடுத்து கொள்ளும் உட்கடன் விவரம், கடனை மீள செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளை பராமரிக்க வேண்டியுள்ளது. விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்யவும் அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி கணினி மயமாக்கப்பட்ட கைபேசிகள் வழங்கப்படும். அம்மா கைபேசி திட்டம் என்ற புதிய திட்டம் துவக்கப்படும். முதற்கட்டமாக, 20 ஆயிரம் சமுதாய சுய உதவி குழு பயிற்றுநர்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் அம்மா கைபேசிகளை தமிழக அரசு வழங்கும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பு




சென்னை: வனத்துறை மானியக்கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளித்து அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் பேசியதாவது: 2011 முதல் 2015 வரை நான்கு ஆண்டுகளில் மாநிலம் முழுவதுமுள்ள 32 மாவட்டங்களில் 1.95 கோடி மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்பு பணிகள் ரூ.122.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் வன உயிரினங்களால் ஏற்பட்ட சேதங்களுக்கு ரூ.14 கோடியே 9 லட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டில் தமிழ்நாட்டில் புலிகள் எண்ணிக்கை 163 ஆக இருந்து. அரசின் நடவடிக்கையால் 2014ம் ஆண்டு கணக்கெடுப்பில் 229 ஆக புலி எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

சர்க்கரை உற்பத்தி பாதிப்பு



புதுடெல்லி: நாட்டின் சர்க்கரை உற்பத்தி நடப்பு ஆண்டில் 5 சதவீதமாக குறையும் என்று இந்திaய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது. சர்க்கரை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் பருவமழை போதுமானதாக இல்லாததே இதற்கு காரணம். இருந்தபோதிலும், சர்க்கரை இருப்பு 9.6 மில்லியன் டன்னாக உயர வாய்ப்பு உள்ளது.

கடந்த ஆண்டு இது 7.5 மில்லியன் டன்னாக இருந்தது என இந்த சங்கம் கூறியுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச்சுக்கு பிறகு உலக சந்தையில் சர்க்கரை விலை உயரும் என்பதால், இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி அதிகரிக்கும் என கிங்ஸ்மன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**நாமக்கல்லில் முட்டை விலை உயர்வு**



நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில், முட்டை விலையில் 5 காசுகள் உயர்த்தி ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 295 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.61. ஒரு கிலோ கறிக்கோழி ரூ.64 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) வருமாறு: பெங்களூரு- 305, மைசூரு- 300, ஐதராபாத்- 295, மும்பை- 330, விஜயவாடா- 295, கொல்கத்தா- 333, டெல்லி- 312 பைசா.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## மேட்டூர் அணை நீர்மட்டம்



மேட்டூர், செப். 29–

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 8 மணி நிலவரப்படி 69.72 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 17,849 கன அடி வீதம் தண்ணீர் வருகிறது.

அணையில் இருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக விநாடிக்கு 13,000 கன அடி வீதம் தண்ணீரும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக விநாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீரும் என மொத்தம் 13,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்று மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 22,000 கன அடி தண்ணீர் வந்தது. இன்று விநாடிக்கு 5000 கன அடி குறைந்துள்ளது.

## தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும்: சட்டசபையில் அமைச்சர் ஆனந்தன் அறிவிப்பு

சென்னை, செப்.29-

தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் ஆனந்தன் அறிவித்தார். தமிழக சட்டசபையில் வனத்துறைக்கான மானிய கோரிக்கை மீது எம்.எல்.ஏ.க்கள் விவாதித்தனர். அவர்களுக்கு பதில் அளித்து பேசியபின் அந்த துறையின் அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:-

2015-16-ம் ஆண்டில் உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கலதிட்டத்தின் ஐந்தாவது ஆண்டு பணிகளாக, உயிர்ப்பன்மை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, தமிழகத்தின் ஆயிரம் கிராமங்களில் 1.02 கோடி மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்யும் பணிகளும் ரூ.115.31 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு இயக்கத்தினை பலப்படுத்தும் வகையில் மாநில பல்லுயிர் வாரியத்திற்கு தனியாக அலுவலகம் அமைக்கப்படும். மேலாண்மை குழுக்கள் அமைக்கவும், மக்கள் பங்களிப்புடன் 25 குழுக்களை உருவாக்கவும், மாவட்ட, வட்டார அளவில் விழிப்புணர்வு திட்டங்களை ஏற்படுத்தவும், ஐந்து புராதன பல்லுயிர் பெருக்க இடங்களை அறிவிக்கவும் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் அறிவிப்புகளை வெளியிட்டார்.